ஸ்ரீ [illegible]
([illegible])

V8.42
N52
1873

# ஜப்பான் பயணம்

(கடிதங்கள்)

ரவீந்திரநாத டாகுர்

மொழிபெயர்ப்பு :
த. நா. குமாரஸ்வாமி

மங்கள நூலகம்
நுங்கம்பாக்கம் : சென்னை

[விலை அணா 15

முதற் பதிப்பு—டிசம்பர் 1952

மூலநூல் :
ஜாபான் யாத்ரீ

Acc No 1873

உரிமை பதிவு

1873

Kabeer Printing Works, Madras (2110)

## முகவுரை

ரவீந்திரநாதர் செய்த உலக யாத்திரைகளில், ஜப்பான் பயணம் நாலாவதாகும். கீழ்நாடுகளிடையே, தலைமையாக நிற்கும் ஜப்பானைக் காண அவருக்கு நெடுநாளாக ஆவல். 1916-வருஷம் மே 3-ஆம் தேதியன்று அவருக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. அவருடன் இந்த யாத்திரையில் கலந்து கொண்டவர்கள் – தீனபந்து ஸி. எப். ஆண்ட்ரூஸ், மிஸ்டர் பியர்ஸன், ஸ்ரீயுத முகுல சந்த்ர·தே ஆவர். ஜப்பான் ஸ்டீமரான ‘தாஸா மாரூ’வில் சென்றார். வழியில் ரெங்கூனில் இவருக்கு நல்ல வரவேற்பு. யு-பா-தின் என்ற பிரபல பர்மியர் இவரை உபசரித்தார். ரெங்கூனிலுள்ள ஜூபிலீ ஹாலில் இவர் அழகிய சொற்பொழிவொன்றைத் தம் வங்க மொழியிலேயே ஆற்றினார். அவ்வமயம், நுண்ணிய பர்மா சிற்பவேலைப்பாடுடைய மரப் பேழையில், வரவேற்புரையை வைத்துத் தந்தனர்.

சிங்கப்பூரில் வெகுநாள் தங்கவில்லை. அங்கேயும் அவருக்கு அமோகமான வரவேற்பு. ஹாங்காங்கிற்கும் பயணமானார். கப்பலில் இருந்தபடியே சீனாவின் ஓர் உருவைக் கண்டார். 29-ஆம் உ மே. ‘உதய சூரிய’ நாடாகிய ஜப்பானின் முக்கிய துறைமுகமான கோபேயில் நம் பாரத ரவி தோன்றினார். ஒஸாகா நகரில் டென்னோஜி ஹாலில், கருத்தாழமுடைய சொற்பொழிவு நடத்தினார். ஜப்பானின் கவிமணியான இயோனி நோகுசி, வங்காளத்துப் புலவனை வெகுவாய்ப் பாராட்டி எழுதினார்.

அப்பால், டோகியோவில், பல்கலைக்கழக மாணவர் முன், ‘ஜப்பானுக்கு பாரதநாடு விடுக்கும் செய்தி’, ‘ஜப்பானிய மனோபாவம்’ (Spirit of Japan) என்ற இரு பெரிய பிரசங்கங்களைச் செய்தார். உயேநோ பூஞ்சோலையில் அவரை வரவேற்று அந்நாட்டு பிரமுகர்களான, கவுண்ட் ஒகுமா, டாக்டர் டாகாடா, பேரன் இயம்காவு, நகர மேயர் ஒகேந்தா ஒன்றுகூடி உபசரித்தனர். அந்தக் கூட்டத்தில் கவி, வங்காளியிலேயே பேசினார். ஒகுமாவுக்கு ஆங்கிலம் தெரியாது. கவி பேசியது ஆங்கிலந்தான்

என்று எண்ணிக்கொண்டாராம். 'டோகியோ மைநாசி' என்ற பத்திரிகையின் எழுத்தாளரான ஸோமி ஒகாவு, 'கீழ்நாடுகள் பாரத தேசத்திற்கு எந்த விதத்திலும் கடமைபட்டிருக்கிறது. ரவீந்தரர் போன்ற மகான்கள் இரு நாடுகளுக்கிடையே விலகி வரும் தொடர்பைச் சேர்க்கவே உலகில் தோன்றுகிறுர்கள்' என்று அறிவித்தார்.

ஜிஜிகா சர்வகலாசாலேயில் மீண்டும் நடத்திய 'ஸ்பிரிட் ஆப் ஜப்பான்' என்னும் சொற்பொழிவில் ரவீந்திரர், சீனுவில் ஜப்பானியரின் அடக்கு முறையைக் கண்டித்தார். இது ஜப்பானில் ஒரு சாராருக்குக் கஷ்டமாயிருந்தது. ஆனல் உண்மையைக் கண்டவர்களுக்கு அச்சமென்பதே இல்லே. ஜப்பானில் தங்கியிருந்த சமயம் ரவீந்திரர், இயற்கை எழில் மிகுந்த, ஜப்பானின் உண்மை அழகு திகழும் நாட்டுப்புறத்தில்தான் இருந்தார். ஹகுநே என்ற சிறு கிராமத்தில் ஓவியரான ஹாராவின் இல்லத்தில் விருந்தினராக இடம் பெற்ருர். அங்கே கண்ணுக்கினிய பூக்களும், மக்கள் நடத்தும் இன்பவாழ்வும், ஜப்பானியக் கலே உணர்வும் இவரை வெகுவாய்க் கவர்ந்தன. இதையெல்லாம் தனக்கு ஒளிக்காமல் காட்டிய ஓவியர் ஹாராவுக்கு ரவீந்திரர் தம் 'ஸ்ட்ரே பர்ட்ஸ்' (வழிப்பறவைகள்) என்ற கவிதைத் துணுக்குகளே அர்ப்பணம் செய்தார்.

இந்தப் பயண நூலில் 14-ஆவது அத்தியாயத்தில் வரும் சிமோமுரா வரைந்த 'குருடனின் பிரார்த்தனே' என்ற ஓவியத்தின் தத்ரூபமான பிரதி ஒன்றை ஜப்பானிலிருந்து எழுதிக் கொண்டு வந்தார் கவி. அந்தச் சித்திரத்தை சாந்திநிகேதன் கலாபவனத்தில் இன்றும் காணலாம்.

திருவலிதாயம்
கிறிஸ்துமஸ் தினம்
25–12–52

தண்டலம் நா. குமாரஸ்வாமி

'ஜப்பானேப்பற்றி இன்னும் துருவி ஆராய்ந்து விஷயங்களேத் தேடுவோருக்கு, இந்தக் கடிதங்கள் ஏமாற்றமே அளிக்கும். இதை ஜப்பானின் முழு வர்ணனேயாகக் கொள்ளமாட்டார்கள். என்னுடைய கடிதங்களில் ஜப்பானும் இருக்கிறது, நானும் சிறிதளவு இருக்கிறேன். நான் தொகுக்கும் விஷயங்கள் என் துனியன்று, என் எண்ணந்தான்.'

ரவீந்திரநாத்

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | புறப்பாடு ... | 1 |
| 2. | யாத்திரை இன்பம் ... | 5 |
| 3. | புயலின் தாண்டவம் ... | 8 |
| 4. | பர்மாவின் வடிவம் ... | 17 |
| 5. | இயற்கையும் பிணங்கும் ... | 26 |
| 6. | வானும் கடலும் ... | 29 |
| 7. | மனிதத் தன்மை ... | 33 |
| 8. | சிங்கப்பூர் அநுபவம் ... | 37 |
| 9. | ஹாங்காங் வழியே ... | 40 |
| 10. | உடல் மீட்டும் நாதம் ... | 43 |
| 11. | ஜப்பான் வாயில் – கோபே ... | 46 |
| 12. | ஜப்பானியப் பண்பும், கலையும் ... | 51 |
| 13. | வாழ்வு – கூத்து – பாட்டு ... | 60 |
| 14. | நிகரற்ற ஓவியங்கள் ... | 66 |
| 15. | ஜப்பானியரின் சாதனை – வெற்றி – சமயம்... | 70 |


# ஜப்பான் பயணம்

## 1. புறப்பாடு

கல்கத்தாவிலிருந்து கப்பல் புறப்படுவதாயிருந்தால், முன்னாள் இரவே கப்பல் ஏறிவிடவேண்டும். இது எனக்குச் சகிக்கவில்லை. யாத்திரை கிளம்பியதும் நம் மனத்துள் நகர்ந்துகொண்டே இருக்கவேண்டு மென்ற உணர்வு பிறந்துவிடுகிறது. இந்த நிலையில் சற்றுத் தாமதம் ஏற்பட்டாலும், நம்மிடம் தென்படும் இருவிதச் சக்திகளுக்கிடையே போராட்டம் மூள்கிறது. என்னைக் கப்பல்வரைக்கும் கொண்டுவிட்டு, என் வீட்டார் எல்லோரும் திரும்பிப் போயினர். நண்பர்கள் எனக்கு மாலை இட்டுப் பிரிவுபசாரணையும் செய்து எப்போதோ விடைபெற்று அகன்றனர். ஆனால் கப்பலோ நகரும் வழியாக இல்லை. கரையிலேயே தங்கிவிடவேண்டியவர் அகன்று போயினர்; அகன்றுபோக வேண்டியவன் ஒரே இடத்தில் இரவெல்லாம் தங்கி இருந்தேன். வீடு நகர்ந்துபோயிற்று, வங்கம் நிலைத்து நின்றது.

நகராத கப்பலில் ஒரு சிறு 'காபினில்' (அறை) அடங்கி இருப்பது, சிறையில் வதைபடுவது போலத்தான். கப்பல் நகர்ந்தாலும், இந்தக் காபினின் நெருக்கத்தை ஒருவாறு பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் அசையாத கப்பலில் ஒரு குச்சுக்குள் ஒடுங்குவதும், ஒரு சமாதியின் கீழ் மரணத்துயில் கொள்வதும் ஒன்றே.

'டெக்'(கப்பல் மேல் தட்டு)கில் எனக்குப் படுக்க வசதி செய்து கொடுத்தார்கள். இதற்குமுன் பன்முறை நான் கப்பலில் சென்றிருக்கிறேன்; எத்தனையோ 'காப்டென்'களுடன் (மீகான்) பழக்கம் உண்டு. ஆனால் இந்த

ஜப்பானியக் கப்பலின் காப்டெனிடம் ஒரு தனிப் பண்பு தென்பட்டது. நெருங்கிப் பழகும் ஒரு மனிதத் தன்மையி லிருந்து, அவர் நம் வீட்டைச் சேர்ந்த சொந்த உறவின ராகவே தோன்றினர். கேட்டமாத்திரம் எந்த உதவியும் செய்யச் சித்தமாகக் காத்திருப்பார்—ஆனல் வேலை மும் முரத்தில் நியமத்தை மீறி இம்மி அளவும் நழுவாதவர். என்னுடன் யாத்திரை செய்யும் ஓர் ஆங்கில நண்பர் டெக்கில் தம் சோபாவைக் கொண்டுவர எவ்வளவோ முயன்று பார்த்தார். கப்பல் அதிகாரி, பிடிவாதமாக மறுத்துவிட்டார். காலை உணவுகொள்ளும் அறையில் அவருடைய மேஜைக்கு நேராக மேலே 'பங்கா' இல்லை. என் மேஜைக்கு அருகில் இந்தச் சௌகரியம் இருந்தது. அதனுல் என் பக்கத்தில் காலியான இடத்தில் உட்கார விரும்பினர். சிறு விண்ணப்பந்தான்.; ஆனாலும், காப் டென் கூறிவிட்டார், 'இந்தப் பொழுது எதையும் மாற்றுவ தற்கில்லை, போஜனத்திற்கு வரும்போது தகுந்த ஏற்பாடு செய்வோம்' என்று. என் மேஜையில் ஓர் ஆளுக்கு இடம் இருந்தாலும், சட்டதிட்டங்களை மீறுவதற்கு வழி இல்லை. துளிப் பிசகு வராமல் கடமையை ஆற்றிவந்தனர் இந்தக் கப்பலில்.

இரவு, வெளியிலேயே படுக்கை; ஆனல் இது என்ன வெளியிடம்? கப்பலின் கூம்புகளுக்குமேல் ஆகாயம், பீஷ்மர் அம்பு அணையின்மீது மரணத்தை எதிர்நோக்கி படுத்திருப்பதுபோல் தோன்றியது. கப்பலில் விளக்குகள் ஏராளமாக ஒளிர்ந்தபோதிலும், அங்கே தென்பட்ட எந்தக் காட்சியும் தெளிவற்றே இருந்தது.

ஒரு கவிதையில் என்னையே கங்குல் அவைக்களத்துப் புலவனுக வர்ணித்திருக்கிறேன். பகல் வேளை, மண்ணுல கிற்கே உரித்தாகும். கங்குல் அமரர் உலகிற்கே உரியது. மனிதர்கள் எதையும் அஞ்சுபவர்கள். இவர்கள் தம் வேலை களைத் தெளிவாகச் செய்வதற்கே ஒரு பெரிய விளக்கு ஆகாயத்தில் எரிகிறது. எதற்கும் நடுங்காதவர்கள் தேவர்



கள்; அவர்களுடைய வேலை யாவும் ஓசைபடாமல் ரகசிய மாகவே நடக்கின்றன. இவர்கள் நடவடிக்கைகளுக்கும் இரவில் தோன்றும் நிச்சப்தத்திற்கும் இடையே ஒற்று மையே திகழ்கிறது. எல்லையற்ற இருள் கவிந்த கங்குலே வானவரின் சபை எனலாம். ஜன்னல் வழியாக இரவில் தேவர்கள் நம்மை பார்த்துக் கண் சிமிட்டுகின்றனர், மோன மொழியில் உரையாடுகின்றனர்.

ஆனல் மனிதன், வேலையிலே வெறிபிடித்துக் கணக் கற்ற விளக்கை ஏற்றித் தொழிற்சாலையை இயக்கி இரவுப் பொழுதையும் தனதாக்கிக் கொள்ளுகிறன். இதனுல் அவன் மனிதத் தன்மையையே இகழ்ந்துகொள்வதோடு விண்ணேரையும் மாசுபடுத்துகிறன். நாம் விளக்கை எரித்து இரவெல்லாம் கண்விழித்து, பரீட்சை பாடங்களை உரு போடுகிறேம். பகலவன் தரும் பிரகாசத்தை அலட்சியம் செய்கிறேம். இதிலிருந்தே மனிதனுக்கும் தேவதைக்கும் இடையே போர் துவங்குகிறது. மனிதன் அமைத்த ஆலைகளின் சிம்னிகள் புகையைக் கக்கி நெடு வான்வரைக்கும் களங்கத்தைப் பரப்புகின்றன. இதைக்கூட அநீதம் என்று சொல்லவில்லை நான். ஏனென்ருல், பகல் மனிதனுடைய ஆட்டத்திற்கு ஏற்ற பொழுது. தேவர்கள் இந்த வேளையில் அவனுடைய அதிகாரத்தில் தலை இடுவ தில்லை. ஆனல் கங்குற்பொழுதில் நிர்மலமான வானில் கணக்கற்ற விண்மீன் கூட்டம் ஒளிரும்போது, இந்த மனிதன் தன் விளக்குகளை ஏற்றுவது அடாதசெயல் ஆகும். இருளின் தூய்மையை மனிதனின் ஒளி விகாரப்படுத்து கிறது. தேவர்கள் உலவும் ரகசியலோகத்தை, செயற்கை தீபங்களால் மழுங்கச்செய்து மானிடன் ஆக்கிரமித்துக் கொள்கிறன்.

அன்று இரவு கங்கை நதியின்மீது இந்த நர தேவர் களின் மும்முரமான போட்டியைக் கண்டேன். வேலையின் களைப்பைப் போக்க மனிதனுக்கு வான் உலகிலிருந்து ஆறுதலைத்தரும் அமைதி துளியேனும் இழியவில்லை. வீறு

கொண்ட மனிதன் தேவர்களைப்போல் தானும் சளைக்காதவன் என்று பெருமை கொள்ளலாம்; ஆனால் இது அவ்வளவும் பொய். மன நிம்மதியைத்தரும் இனிமையான இரவின் அமைதியைத்தான் அவன் பாழாக்குகிறான். தன் அட்டூழியங்களால் இருளையும் பின்னும் கறைபடுத்திவிடுகிறான்.

வெட்ட வெளிச்சத்தால் பகற்பொழுதின் மகிமை குன்றிவிடுகிறது. இருளார்ந்த கங்குலோ தன்னுள் எதையும் மறைத்துக்கொண்டு நிர்மலமாக விளங்குகிறது. கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே! மைபோல் கருமையாக இருந்தாலும், அதன் உள்ளம் கரவற்றது. பகலோ நதியைப் போன்றது. அதன் ஓட்டம் ஒள்ளியதுதான் ஆனால் கலங்கியே இருக்கும்; தெளிவற்றது. நான் கப்பலில் தங்கிய அன்று, இரவு வேளையின் காடாந்தகாரம் துறைக்கருகில் குழம்பியே தென்பட்டது. வானிலிருந்து நம்மை அமைதி உலகிற்கு அழைக்கும் தேவர்களின் பொலிவான முகங்கள்கூட சோர்ந்தே விளங்கின.

இதே அனுபவம் ஒருசமயம் ஏடனில், கப்பல் தங்கிய போது எனக்கு ஏற்பட்டது. மனிதன் செய்யும் அலங்கோலம் பொங்கிப் புரளும் முந்நீரையும் கலக்கி அசுத்தமாக்கியது. எங்கேபார்த்தாலும் எண்ணெயின் பளபளப்பு. எதையும் விழுங்கும் கடல் அந்த மாசை ஜீரணம் செய்து கொள்ளவில்லை. அன்று இரவு கப்பலின் மேல் தட்டிலிருந்தவாறு எல்லையற்ற இரவு அமைதி இழந்து மனிதனால் மாசுபடுவதைப் பார்த்து வருந்தினேன். தேவர்குழாம் ஒரு காலத்தில் அவுணர் சிறையிலிருந்து மீள பிரம்மனை அடைக்கலம் புகுந்ததுபோல், இன்று மானிடர் அலக்கழிப்பதிலிருந்து விடுதலைபெற சிருஷ்டிக் கடவுளை என்ன வேண்டிக்கொள்கிறார்களோ?



## 2. யாத்திரை இன்பம்

கப்பல் நகர்ந்தது, இனிய தென்றல் உந்த, நீர் அரங்கில் நடனமாடிக்கொண்டு. ஆனால் இந்த நடனம் நீர் வழியே மிதப்பதோடு நிற்கவில்லை. ஒரு புதிய காட்சியை நம் கண்முன் நிறுத்துகிறது. அந்தக் காட்சி ஒரு புதிய சுவையையும் நமக்கு ஊட்டுகிறது.

நாம் நடந்து செல்லும்போது நிறைவான காட்சி நம் கண்ணில் படுவதில்லை. கப்பலில் மிதந்து செல்லும்போது ஒன்றுக்கொன்று முரணான இரு அனுபவங்கள் இழைகின்றன. நாம் அசையாமல் உட்கார்ந்திருக்கிறோம், போய்க்கொண்டும் இருக்கிறோம், அதனாலேயே எதிரே இலங்கும் காட்சிகளைப் பூரணமாகக் கண்டு ஆனந்திக்கிறோம். நீர் நிலம், வானம் இம்மூன்றும் ஒன்றாகச் சேரும் அழகு கப்பல் பயணத்தில்தான் தென்படும்.

மிதந்து செல்வதில் மற்றுமோர் அனுகூலமே இருக்கிறது. வழி தவறிவிடுமே என்று நம் கவனத்தை நிலைக்கச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. கப்பல் நம்மை ஏந்திச் செல்வதனால் இந்தத்தொல்லை கிடையாது. ஆகவே சுற்றுப்புறக் காட்சிகளைக் கண்டு களிப்பதிலேயே பொழுதைப் போக்குகிறோம். விரிவாகவே நம் கட்புலன் எதையும் நோக்குகிறது. இன்பத்தைப் பெறும் வகையில் சிறிதேனும் ஆயாசம் ஏற்படுவதில்லை.

அன்று காலை இயற்கை அழகி, பச்சைக் கறைபோட்ட ஆற்று நீரின் காவி உடை அணிந்துகொண்டு என் கண் முன் முறுவல் செய்தாள். நான் அவ்வழகை பார்த்துக் கொண்டே இருந்தேன். கண்ணால் பருகும் 'நான்' என்னும் தன்மை, மொழியாகவோ வர்ணக் கோடுகளாகவோ உரு மாறினால் அதுவே இலக்கியமாகிவிடுகிறது; கலையாகி விடுகிறது! யாராவது என்னை வெடுக்கெனக் கேட்கலாம்; 'நீ கண்ணாரக் காண்பதனால் எனக்கென்ன வரப்போகிறது? என் வயிற்றுப் பசியை போக்குமோ? என்னை வாட்டும்

மலேரியா காய்ச்சலை நீக்குமோ? இருமடங்காக என் நெற்கழனி விளைந்து களஞ்சியம் நிரம்புமோ?' என்று; சரியான கேள்வியே! நான் காண்பதனால் பிறருக்கு என்ன பயன்? ஆனால் என்னைப்போல், காண்பதற்கென்றே கண் படைத்தவர்கள் இராதுபோனால் உலகில் கலைக்கோ இலக்கியத்திற்கோ இடம் இல்லை.

காட்சிகளை வெறுமெனப் பார்ப்பதோடு நான் நிற்கவில்லை. என் மனத்துள் செல்லும் பாவனைப் பெருக்கில் மிதந்து செல்கிறேன். வெளியே திகழும் உருவங்களில் என் கண் நிலைத்து விடுவதுபோல் என் உள்ளத்துள் தோன்றும் சித்திரத்தில் என் மனம் இலயித்துவிடுகிறது. இந்தச் சிந்தனை எவ்வழியே படரும் என்பதற்கு ஒரு வரையறை கிடையாது. அதைத்தொடுத்து ஒரு மாலையாகக் கோப்பதும் என்னுடைய சொந்தத் தொழில். வெளி உலகிலும், என் மன உலகிலும் நான் கண்ட, எனக்கே ஆனந்தம் தந்த விஷயங்களை வர்ணிப்பதே என் வேலை. பிறருக்கு அனுவசியமானாலும் எனக்கு அவசியமாய் இருக்கிறது. பின் வேறு எந்த வழியில் என்னுள் ஊற்றுபோல் கசியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது?

உபனிடதத்தில் வரும் ஓர் அழகிய தத்துவத்தை உங்களுக்கு நினைவுறுத்துகிறேன். ஒரு கிளையின்மீது இரு பறவைகள். அதில் ஒன்று கனியைச் சுவைக்கிறது; மற்றொன்று அதைப் பார்த்துக்கொண்டே இருக்கிறது. பார்க்கும் பறவை அடையும் ஆனந்தமோ எல்லையற்றது. அதனுடைய ஆனந்தானுபவம் கலப்பற்றது; கட்டுக்கடங்காதது—விடுதலையின் பேர் உவகை. இதேபோல் மனிதனிடத்திலும் இரண்டு பறவைகள் உண்டு. அதில் ஒரு பட்சிக்கு எந்தக் காரியமும் பிரயோஜனத்தோடு கூடியது; மற்றொன்றுக்கு ஒருவித பிரயோஜனமும் இல்லை. முதல் பட்சி அடைவது போகம். மற்றொன்று பெறுவது ஆனந்தம். போகத்தில் நாட்டம் உடைய பட்சி, பொருள் உலகை நிர்மாணம் செய்கிறது. விலகி நிற்கும் ஆனந்தப் புள் சுவை



மிகுந்த கலையைப் புதிதாகப் படைக்கிறது. நிர்மாணம் செய்வதென்றால் ஒரு திட்டத்தின்படி தொழிலை இயற்றுவது. இங்கே ஆக்கும் பொருள் முக்கியமானதன்று; ஆக்கும் முறைதான் முக்கியமானது. ஆனால் உண்மையான படைப்புத் தொழில் எந்த அளவுகோலுக்கும் உட்படாதது. தன்னையே முழுவதும் வெளிப்படுத்துவதில்தான் இதற்கு இன்பம். போகத்தை விரும்பும் பறவை கையாளும் உபகரணங்கள் புறத்தில் உள்ளவை. ஆனால் சிருஷ்டியில் ஈடுபடும் பறவைக்கு உதவியாக இருப்பது 'தான்' என்னும் அதன் அகத்துள் உறையும் அழியாப் பொருளே. தானாகி இப்பொருள் வெளியே தோன்றும்பொழுது இலக்கியமாகவோ, கலையாகவோ மாறுகிறது. எந்தக் கடமையும் அதற்கு இல்லை; எந்தக் கட்டுப்பாட்டிற்கும் அது அடங்காது.

உலகில் எல்லாவற்றையும் விட பெரிய ரகசியம் என்னவென்றால், காணும் காட்சியோ, பொருளோ முக்கியமன்று. காணும் மனிதன்தான் முக்கியம். ஆயிரக்கணக்கான அனுபவங்களைக்கொண்டே எதையும் காண விழைகின்றோம். எவ்வாறு நிகழ்கிறது, எவ்வாறு நிகழவேண்டும், எவ்வாறு நிகழ்ந்தால் அழகாய் இருக்கும் இதை யெல்லாம் பரிசீலனை செய்பவனே கலைஞன்!

# 3. புயலின் தாண்டவம்

வியாழக்கிழமை மாலைப் பொழுது கடலோடு ஆறு சேரும் இடத்தில் ‘பைலெட்’ (வழி காட்டி) எங்கள் கப்பலிலிருந்து இறங்கிவிட்டான். கடல் என் கண்ணில் படுவதற்கு முன்பே அதன் உருவை ஒருவாறு கண்டேன். நதியின் இரு கரையும் அகன்று கொண்டே வந்தன. ஆனால் இன்னும் மண்ணின் நிறம் ஆற்று நீரில் தென்பட்டது. நிலத்தைவிட நீல வானோடு, நீர்ப்பரப்பு உறவாடும் நிலைக்கு இன்னும் வரவில்லை. வானிலும் ஆற்று நீரிலும் தென்படும் திசைமுகம் மட்டும் மாறிக்கொண்டே வந்தது. இப்பொழுது அலையின் குறட் சந்தம் வேறு விதமாக மாறுகிறது. நெடுந்தாண்டகமாக அலைகள் கம்பீரமாகப் புரண்டன. இன்னும் கடலின் அம்போதரங்கம் ஆரம்பிக்கவில்லை.

என்னுடைய கப்பலின் கீழ்த் தட்டில் டெக் பிரயாணிகள் இருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் சென்னைவாசிகள்; ரங்கூனுக்குப் போகிறவர்கள். கப்பலைத் தம் வீடுபோல் நினைத்துக்கொண்டு வளைய வந்தனர். கப்பலின் உக்கிராண அதிகாரி ஒருவர் ஒவ்வொருவருக்கும் சித்திரம் போட்ட காகித விசிறிகளை வழங்கினார். அதைப்பெற்று இவர்கள் வெகு சந்தோஷம் கொண்டார்கள்.

இவர்களில் முக்கால்வாசி ஹிந்துக்கள். சௌகரியம் போல உணவு கொள்ளுவதற்கு வசதி இல்லாமல் போய்விட்டது இவர்களுக்கு. கருப்பங்கழியை மென்றும் முறுக்கைத் தின்றும் தம் பசியைப் போக்கிக் கொண்டனர். மொத்தத்தில் சுத்தமாகவே இவர்களுடைய ஆசாரங்கள் இருந்தன. ஆனாலும் இவர்கள் சில விஷயங்களில் மீறி, அசுத்தமான காரியங்களையும் செய்தனர். கரும்புச் சக்கையை மென்று விட்டு சுலபமாகவே பக்கத்தில் உள்ள கடலில் துப்பிவிடலாம்; ஆனால் அவ்வளவு கஷ்டம் ஏன்? உட்கார்ந்திருக்கும் இடத்திலேயே உமிழ்ந்து விடுவார்கள். தம்மைச்



சுற்றிலும் குவியும் ஆபாசக் குப்பையை இவர்கள் துளியேனும் லட்சியம் செய்வதில்லை. டெக்கில் சில முஸ்லீம்களும் தென்பட்டனர். உடையின் சுத்தத்தில் அவர்கள் கவனம் செலுத்தவில்லை; ஒழுங்கில்தான். எப்போதும் தலையில் குல்லாய் அணிந்துகொண்டிருந்தனர். சிறிதே அறிமுகமானவர்களைக் காணும்தோறும் அவர்கள் அடிக்கடி சலாம் போட்டனர். வெளிப்பகட்டில்தான் அவர்கள் லட்சியம் என்பதை உணர்ந்தேன். ஜாதிக்கட்டுப்பாடு உடையவர்களுக்கு வெளி மனிதர்களோடு உள்ள உறவு மேல்வாரியானதுதான்; ஆழமற்றது. ஆனால் முஸ்லிம்களிடையே இந்த வகுப்பு வேற்றுமை இராததனாலேயே வெளி உலகோடு அவர்கள் நெருங்கிப் பழகுகிறார்கள். மனுநீதியில் தாய், சிற்றன்னை, அம்மான், அத்தை இவர்களுடன் பழகவேண்டிய ரீதியையும், ஆசிரியன், குரு இவர்களிடம் நடந்துகொள்ளும் மாதிரியையும், அந்தணன், க்ஷத்திரியன், வணிகன் இவர்கள் ஒருவரோடு ஒருவர் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்னும் விதிகளையும் காண்கிறோம். ஆனால் மனிதனோடு மனிதன் சாதி குல வருணாசிரமம் மீறி எவ்வாறு பழகவேண்டும் என்பதற்கு வழிகாட்டும் நூல் எதுவுமே இல்லை.

காப்டென், அன்று மாலைப்பொழுது புயல் காற்று எழும்; பரோமீடரில் பாதரசம் இறங்கிவிட்டதென்று அறிவித்தார். ஆனால் ஆகாயத்தில் சூரிய அஸ்தமனம் என்னவோ என்றும்போல் சாந்தமாகவே தோன்றியது. காற்றும் விசையாக வீசவில்லை. அதை மந்தமாருதம் என்றும் கூறுவதற்கில்லை. கடல் அலைகள் இன்னும் தம் பேய்க் கூத்தை ஆரம்பிக்கவில்லை. அலை ஓசை மெல்லிய மிருதங்க நாதம் போலவே இருந்தது. இன்னும் புயலின் தான வர்ணம் ஆரம்பிக்கவில்லை. மனிதனுடைய ஜாதகத்தை வைத்துக்கொண்டு அவனுடைய வருங்கால பலாபலனை கூறுவது எவ்வாறு கடினமோ அந்தமாதிரி இந்தக் காற்றின் போக்கும் இருந்தது. கப்பல் மெல்ல நிலத்தின் தொடர்பை

விட்டு அகன்றது. சுமுகமான நீலக்கடல் அதை அழைத்தது. நானும் டெக்கில் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு தொடுவானில் மறையும் மாநிலத்தை நோக்கியபடி மேற்கு முகமாக உட்கார்ந்தேன்.

கொஞ்சங் கொஞ்சமாக காற்றின் நாடி துரிதமாய் அடிக்க ஆரம்பித்தது. செக்கர்வானின், கோலம் புனைந்த மணையில் கருநீல முசுக்கு இட்டு சந்தியாதேவி வந்து அமர்ந்தாள். ஆகாயத்தில் அப்பொழுது துளியேனும் மேகத்தின் மாசு இல்லை. வானிடை சாயாபதம் (தாரகைப்பாதை) விண் இழி கங்கைபோல் ஜொலித்தது.

டெக்கில் நான் படுக்கையில் படுத்துக்கொண்டபொழுது, காற்றும் ஜலராசியும் ஒன்றை ஒன்று ஏசிக்கொள்ளத் தொடங்கின. 'உஸ், உஸ்' என்று காற்றின் பல்லவிக்கு ஏற்ப, 'சோ சோ' என்று சமுத்திரம் பக்கவாத்தியம் இசைத்தது. ஆனாலும், இன்னும் புயலின் முக்கிய ராக ஆலாபனம் கிளம்பவில்லை. வானில் ஒளிரும் தாராகணங்களை நோக்கிக்கொண்டே நான் எப்பொழுது கண்ணயர்ந்தேனோ எனக்கே தெரியாது.

ஒரு சொப்பனம் கண்டேன்; நான் யாரிடமோ மரணத்தை வியந்து கூறும் சில வேத மந்திரங்களை விளக்கிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அந்த மந்திரங்களின் கம்பீர ஓசைதான் என்ன! உலகையே நிரப்பும் ஓர் அழுகையின் ஓலம் போலவே தொனித்தது. அதில் வைராக்கியத்தின் சங்கநாதம் ஒலித்தது. இந்தக் கனவுக்கு இடையே திடுமென நான் விழித்துக்கொண்டேன். அச்சமயம் கடல் நீர் வெறிபிடித்துக் கொந்தளித்தது. சமுத்திரம் என்னும் சாமுண்டி தன் நுரை நாக்கை வெளியே நீட்டி அட்டகாசம் செய்து நடனமாடினாள்.

வானை வெருவி நோக்கினேன். இருண்ட மேகங்கள் தலைதெறிக்க ஓடின. இன்ன வழி செல்வதென்று தெரியாமல் ஆழ் ஆழி உறுமிற்று. அதன் மனப்போக்கு எவ்வாறு செல்லும் என்பது விளங்கவில்லை. மாலுமிகள் சிறு



கைவிளக்குகளை ஏந்திக்கொண்டு இங்குமங்கும் ஓடினர். ஆனால் துளிக்கூட சப்தம் இல்லை. நடுநடுவே எஞ்சின் அறையை நோக்கி சுக்கானி அனுப்பும் மணி, கேட்டுக்கொண்டே இருந்தது.

படுக்கையில் புரண்டு நான் நன்றாகத் தூங்க முயன்றேன். ஆனால் வெளியே, நீரும் காற்றும் தொடுத்த போரின் மும்முரம், நான் கனவில் கண்ட மரண மந்திரத்தின் ஓசைபோலவே இருந்தது. தூங்குவதும் விழித்துக்கொள்ளுவதுமான என் நிலை, புயலும் அலையும் தாறுமாறாக ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்வது போலவே இருந்தது.

கோபம் அதிகரித்தால் ஒருவனுக்கு வாய்குழறி ஆத்திரம் பொங்கிப் பொங்கி வருவதுபோல், விடிகாலையில் கடல் விளிம்பிலிருந்து மேகங்கள் குவை குவையாக எழுந்தன. 'ச்.ஷ்.ஸ்' என்று சீழ்க்கை அடித்தது காற்று. பொங்கும் கடல் வல்லின எழுத்து வரிசைகளைப் படித்தது. சடையை விரித்து புருவம் நெறித்து முகில்கள் திக்கு திசை எங்கும் சுழன்றன. கடைசியில் வானம் பெருங்கூச்சலுடன் தாண்டவமாடும் கடல்மீது இறங்கியது. அந்தக் காட்சி ஒரு புராணக்கதையை எனக்கு நினைவூட்டியது. நாரதரின் வீணாகானத்திற்கு மயங்கி விஷ்ணுகங்கை உலகை நோக்கி பயங்கர ஒலியுடன் இழிந்தாள். ஆனால் இன்று இந்தப் பிரளய வீணையை இசைக்கும் நாரதர் யாரோ? இவரோடு சிவகணங்களாகிய நந்தியும் பிருங்கியும் சேர்ந்துகொண்டனர். விஷ்ணுவும் ருத்திரனும் வேற்றுமையின்றி கலந்தே விளங்கினர், இந்தப் புயல் தரும் காட்சியில்.

இதுவரை கப்பலில் அன்றாட வேலை ஒருவிதமாக நடந்துவந்தது. அன்று, காலைஉணவைக்கூட சரிவரப் பரிமாறினார்கள். காப்டெனின் முகத்தில் கவலைக் குறியே இல்லை. இந்தமாதிரி சோதனைகள் எப்பொழுதாவது வருவது வழக்கம் என்று சகஜமாகக் கூறினார். இளமையில்

தலைகால் தெரியாமல் துள்ளுவதை அவ்வயதின் லட்சணம் என்கிறோமே அதே போலத்தான்.

காபினில் (குச்சுக்குள்) இருந்தால், சிலம்பினுள் பரலைப்போல் உருளவேண்டியதுதான். அதைவிட 'டெக்கில்' இருந்தபடியே புயலோடு அளவளாவுதலே மேல். கம்பளிச் சால்வையைப் போர்த்துக்கொண்டு இயற்கையின் ஆட்டத்தைக் காண உட்கார்ந்துகொண்டேன். மழைச் சாரலும் காற்றின் கடுமையும் மேற்குப் பக்கத்தில்தான். அதனால் கிழக்குப்பக்கமாக உள்ள டெக்கில் அமர்வதற்கு இடையூறு எதுவும் இல்லை.

புயலின் வேகம் அதிகரித்துக்கொண்டே வந்தது. அலை எது, மேகம் எது என்ற வித்தியாசம் தெரியாமல் போய்விட்டது. கடல் நீரில் நீல நிறம் தென்படவில்லை. நாலு திசையும் மங்கலாகத் தென்பட்டது. இளம் வயதில் அரபிக் கதையில் படித்திருக்கிறேன். வலைபோட்டு இழுக்கும்போது ஒரு செம்படவனுக்கு மூடிபோட்ட கடாயி ஒன்று கிடைத்தது. அதன் மூடி திறந்தவுடன் கரும் புகைபோல் சுருள் சுருளாகப் பெரும் பூதம் எழுந்து வந்தது. அதேபோல் சமுத்திரத்தின் நீலநிற மூடி கழன்று போய், அதன் உள்ளிருந்து புகைச் சுருள்போல் லட்ச கணக்கில் மேககணங்கள் ஒன்றை ஒன்று தள்ளிக்கொண்டு ஆகாயத்தில் அளாவி நின்றன.

ஜப்பானிய மாலுமிகள் ஓடி வேலைசெய்தாலும் அவர்கள் முகத்தில் துளியேனும் அலுப்பு தென்படவேண்டுமே! சிரித்த முகமாகவே இருந்தனர். கவலையற்று அவர்கள் வேலை செய்வதைப் பார்க்கும்பொழுது, சமுத்திரம் பயங்கர வேஷம் போட்டுக்கொண்டு கப்பலோடு விளையாடுவதாகவே தோன்றியது. மேற்குப்புறமாக உள்ள டெக்கிற்கு செல்லும் வழிகள் யாவும் மூடிக்கிடந்ததால், சீறி எழும் அலைகள் எப்படியோ உள்ளே புகுந்துவிடும். அதைப் பார்த்து அவர்கள் 'ஹோ ஹோ' என்று நகைத்துக் குதூகலம் கொள்ளுவார்கள். காப்டென் எங்களிடம், 'இது



ஒன்றும் பிரமாதமான புயல்காற்றன்று' என்பார். ஸ்டீவர்டு எங்கள் மேஜைமீது விரலால் கோடுகள் வரைந்து புயலின் போக்கையும், அதனால் கப்பல் திசைமாறிச் செல்வதையும் தெளிவாகக் காட்டினார். இதற்குள் வலுத்த மழையின் சாரல் என் கம்பளிப் போர்வையை எல்லாம் சொட்டச்சொட்ட ஈரமாக்கிவிட்டது. உள் எலும்புவரைக் கும் குளிரினால் எனக்கு நடுங்கியது. சௌகரியமான இடம் இராதுபோகவே காப்டெனுடைய அறைக்குள் அடைக்கலம் புகுந்தேன். காப்டென் திகில் படுபவராகவே காணவில்லை. அப்படி இருந்தாலும், அவர் முகத்தில் அதன் குறி எதுவும் வெளிக்குத் தென்படவில்லை.

அவர் அறையினுள் எனக்கு இருப்புக்கொள்ளவில்லை. ஈரப் போர்வையை சுற்றிக்கொண்டே மீண்டும் நான் டெக்கில் வந்து உட்கார்ந்தேன். கப்பலின் ஆட்டம் அங்கு அவ்வளவாக இல்லை. ஏன் என்றால், கப்பலின் அடித்தளத்தில் ஏராளமான சாமான்களின் பளுவு இருந்தது. வெறும் குடம்தான் நீரில் கவிழும் நிலைக்குச் செல்லும். அதனுள் பளுவு ஓரளவு இருந்தால், அது மூழ்காமல் மிதக்கும் அல்லவா? மரணத்தின் நினைவே எனக்கு அடிக்கடி எழும். என்னைச்சுற்றி எங்கும் மரணத்தின் சீற்றம். திக்கிலிருந்து திகாந்தம்வரை மரண தேவதையின் உல்லாசக் கூத்து. இதற்கிடையே எம்மாத்திரம் என் உயிர்? அது மிக அற்பமானாலும் அதை நம்பித்தான் நாம் ஆசைக் கோட்டை கட்டுகிறோம். புயல் எவ்வளவு பெரியதானாலும், அச்சம் தருவதாய் இருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல் இருக்கிறோம். ஆனால் தவச் சிறிதான உயிரைவிட நனி பெரிதான இயற்கைக்குத் தலைவணங்குவது மேலல்லவா?

டெக்கில் உட்கார்ந்திருக்கச் சாத்தியப்படவில்லை. கீழே இறங்கி என் அறைக்கு வரும் வழியில் படிக்கட்டு இடைகழி எங்கும் நெருக்கமாக டெக் பிரயாணிகள் ஒடுங்கி உட்கார்ந்திருப்பதைக் கவனித்தேன். எப்படியோ அவர்

கள்மீது இடறிக்கொண்டு என் காபினுள் புகுந்து படுத்துக்கொண்டேன். இந்தத்தடவை என் உடலும் உள்ளமும் வெகுவாய்க் கலங்கிப்போயின. தேகத்தோடு பிராணன் ஒத்து இராதது போலவே எனக்குப் பட்டது. பாலைக் கடைந்தால் எவ்வாறு ஏடு சின்னபின்னமாகப் போகுமோ, என் உயிரும் அவ்வாறான நிலைக்கு வந்தது. டெக்கில், கப்பலாட்டத்தை ஒருவிதமாகச் சகித்துக் கொள்ளலாம். ஆனால் கப்பலினுள் உருட்டலைச் சமாளிப்பதுதான் கடினம். பருக்கைக் கற்களின்மீது நடப்பதற்கும் பாதரட்சைக்குள் கற்களை வைத்துக்கொண்டு நடப்பதற்கும் என்ன வித்தியாசமோ, அதேதான் டெக்கிற்கும் காபினுக்கும். ஒன்றில் அதிர்ச்சி இருந்தாலும் பந்தமில்லை. மற்றொன்றில் பந்தமும் உண்டு அதிர்ச்சியும் உண்டு.

காபினில் படுத்தவண்ணம் என் செவிக்கு ஒரு பேர் இரைச்சல் கேட்டது. டெக்கின்மீது என்னவோ ஒன்று மளமளவென்று முறியும் ஓசைதான். காபினுக்குள் காற்று புக டெக்கில் 'பன்னல்'கள் வாயைத் திறந்துகொண்டிருக்கும். இப்போது அற்றின் வாய் மூடிக் கிடந்தாலும் அலை நீர் 'சளார், சளார்' என்று ரந்திரத்தின்வழியே உள்ளே பெருகிவரும். வெளியிலோ நாற்பத்தொன்பதுவித வாயுக்களின் பேய் நடனம். காபினுள்ளோ ஒரே இறுக்கம். ஓர் எலக்டிரிக் பங்கா சுழன்றுகொண்டிருந்தது. குளிர்ச்சியைத் தராமல் உள்ளிருக்கும் வெம்மையைத்தான் அது அதிகப்படுத்தியது.

இதைச் சகிக்க முடியாததுபோல் எனக்கு திடுமெனப் பட்டது. ஆனால் மனிதனிடத்தில், உடல், உள்ளம், உயிர் இவற்றை யெல்லாம்விட நிரந்தரப் பொருள் ஒன்று இருக்கிறது. புயல் கவிந்த ஆகாயத்திற்குமேல் அமைதி திகழ்கிறது. குழம்பிடும் கடலுக்கு அடியிலே சாந்தி நிலவுகிறது. ஆகாயமும் கடலும் இந்த அறிய பண்பினால் உயர்வடைவதுபோல் மனித உள்ளத்தின் ஆழத்திலும், அவன் உணர்வின் உச்சத்திலும் அகண்டாகாரமான சாந்த



புருஷன் ஒருவன் வாசம் செய்கிறான். துன்பமோ, இடுக்கணோ தாக்கும்போது இவன், நமக்கு அமோக பலத்தைத் தருகிறான். துன்பம் மாயமாய் மறைகிறது. நமன்கூட ஓடி ஒளிந்துகொள்கிறான்.

சாயங்காலத்திற்குமேல் புயலின் வேகம் தணிந்து வந்தது. கப்பல் மேல்தட்டில் ஏறிக் கவனித்தேன். இத்தனை நாழிகை, பொங்கும் கடலோடு கப்பல் மற்போர் நடத்தியதன் குறி அதன் உடலெங்கும் தென்பட்டது. காப்டென் அறையின் ஒருபுறத்துச் சுவர் முறிந்துபோய் அவருடைய முக்கிய சாமான்கள் யாவும் ஈரம் தோய்ந்து போயின. ஒரு 'லைப் போட்' அடியோடு பழுதாகிவிட்டது. டெக் பிரயாணிகள் இருக்கும் ஒரு தட்டின் பெரும் பகுதியும், உக்கிராண அறையின் ஒரு பாகமும், அடையாளம் தெரியாதபடி சுக்கலாகிவிட்டன. ஜப்பானிய மாலுமிகள் புயல் அடிக்கும் சமயங்களில் செய்யும் வேலைகள் யாவும் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பவை. கப்பலுக்கு ஏற்பட்ட பெரும் விபத்தை விலக்குவதற்கு இவர்கள் அரும்பாடு பட்டதைத் தெரிவிக்க டெக்கெங்கும் கார்க்கினால் செய்த உடைகள் குவிந்து கிடந்தன. ஒருவேளை கப்பல் மூழ்கும் நிலைக்குவந்தால் உயிர்பிழைக்க இதை அணிந்துகொண்டு நீந்துவார்களாம். இந்தப் புயலில், எல்லாவற்றையும்விட என் மனத்துள் ஆழமாகப் பதிந்த காட்சி ஒன்றேதான். ஜப்பானிய மாலுமிகள் சண்டமாருதத்தை எள்ளி நகையாடியதுதான்!

சனிக்கிழமையன்று வானம் மாசு நீங்கி துல்லியமாக விளங்கினாலும் சமுத்திரத்தின் கோபம் மட்டும் இன்னும் அடங்கவில்லை. ஆச்சரியம், புயலின் மும்முரத்தில்கூட கப்பல் இப்படி ஊசலாடவில்லை. கடுவளி தன்னை இவ்வாறு அலக்கழித்ததைப் பொறாது அது பொங்கிப் பொங்கித் துடித்தது. நம் உடல்வரைக்கும் இத்தகைய அனுபவமே ஏற்படுகிறது. விபத்து மூண்டு நம்மைத் தாக்கும்பொழுது அதைத் தாங்கும் வன்மை எங்கிருந்தோ வருகிறது.

ஆனால் விபத்து விலகியதும் அது நம்மை நிலைகுலைந்த விதத்தை மறந்துவிடாமலே பொருமுகிறோம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. கடல் நீர் தெளிவான நிறம் கொண்டது. இத்தனை நாளுக்குப்பிறகு ஆகாயத்தில் ஒரு பட்சி பறப்பதைக் கண்டேன். இந்தப் பறவைகள்தாம் வான வெளிக்கு மாநிலத்தின் தூதை ஏந்திச் செல்கின்றன. பறக்க இடமும் பார்க்க வெளிச்சமும், ஆகாயம் தந்து உதவுகிறது இவைகளுக்கு. பாடும் உணர்வை, மண்ணகம் அளிக்கிறது. கடலில் எழும் இசையோ வெறும் அலைகளின் அல்லோல கல்லோலமே. அதனுள் அனந்தகோடி ஜீவ ராசிகள் வாழ்ந்தாலும் அவைகளுக்குப் பாடும் குரல் கிடையாது. ஊமையான இத்தனைப் பிராணிகளின் சார்பாகக் கடல் பெருங்குரலெடுத்துப் பாடுகிறது. நிலத்தில் வாழும் ஜீவன்கள் தம் குரல் மூலமாகவே மனோபாவங்களை வெளிப்படுத்துகின்றன. ஆனால் நீரினுள் உலவும் பிராணி இனங்களின் மொழியோ, குரலோ, அதன் அசைவில்தான் ஒலிக்கிறது. சமுத்திரம், அசைவின் அரங்கு. மண்ணகம், ஒலியின் அவைக்களம்.

அன்று மாலை ஐந்து மணிக்குக் கப்பல் ரங்கூனுக்குப்போய் சேரவேண்டியிருந்தது. செவ்வாய்க்கிழமையிலிருந்து சனிக்கிழமைவரை உலகில் எத்தனையோ செய்திகள் வெளிவந்திருக்கும். இவை எனக்காகக் குவிந்து கிடந்தன. கார்பாரில் போடும் தனத்தைப்போல் இவை ஒரு கணக்கு வழக்கிற்கு உட்படாதவை. பாங்கில் சேரும் மூலதனம்போல் நமக்குத் தெரியாமலே வட்டியுடன் சேர்ந்துகொண்டே வரும்.



# 4. பர்மாவின் வடிவம்

வைகாசி 24-ஆம் தேதி பிற்பகல் ரங்கூனுக்கு வந்து சேர்ந்தேன். ஓரிடம் நிற்காமல் ஓடி ஓடி விரைவாக ஊரைச் சுற்றிப் பார்ப்பது என் வரைக்கும் களைப்பைத் தரும் விஷயம்; பயனற்ற காரியம் என்றே சொல்லுவேன். ஆகவே என்னிடத்தில் நீங்கள் பயண வர்ணனையை அதிகமாக எதிர்பார்க்க முடியாது. நீதி ஸ்தலத்தில் சத்தியப் பிரமாணம் செய்து நான் சாட்சியும் கூற முடியும்; ரங்கூன் என்ற நகரத்தை நான் அடைந்தேன் இது உண்மை. ஆனால் மேலானதொரு நீதி மன்றத்தில் சத்தியம் செய்யச் சொன்னால் ரங்கூனை நான் பார்க்கவில்லை என்று தான் சொல்லுவேன்.

ரங்கூன் நகரம் ஒன்று இருப்பது உண்மையே அல்ல— இப்படி எண்ணவும் இடம் ஏற்படுகிறது. ரஸ்தாக்கள் எல்லாம் நேராக, விசாலமாக ஒழுங்காக சுத்தமாக இருந்தன. மாட மாளிகை பளிச்சென்று இருந்தன. வழி துறை எங்கும் மதராஸிகள், பஞ்சாபிகள், குஜராட்டிகள் தென்பட்டனர். இவர்கள் கூட்டத்திற்கு இடையே இங்குமங்கும் தெளித்தாற்போல் பல்நிறப் பட்டு லுங்கிகள் அணிந்த பர்மா ஆடவரோ, பெண்களோ இருந்தனர். இவர்களே இந்த இடத்தில் வேற்று நாட்டினரைப்போலவே தோன்றினர். அவ்வளவு எதற்கு, நம் கல்கத்தாவிலிருக்கும் கங்கைப்பாலம், கங்கைக்குச் சொந்தமா? பாலம், கங்கையின் கழுத்துக்கு உயிர்ச்சுருக்கு. இந்தக் கணக்கில் ரங்கூன் என்ற நகரம் ஒரு பர்மிய நகரமே அன்று. அந்நாட்டுப் பண்பிற்கு எதிரிடையாக நிற்கும் ஏளனம் என்றே கூறுவேன்.

முதலாவது இராவதி ஆற்றினுள் நுழைந்து ரங்கூனை அணுக அணுக பர்மாவைப்பற்றிய முதல் அறிமுகம் என்ன தெரியுமா? கரை இருபக்கமும் மண்ணெண்ணெய் தொழிற்சாலைகளின் விண்ணளிவந்த புகைப்போக்கிகள்

நின்று எழும்பி பர்மா சுருட்டைக் குடித்தன. அதற்கு மேல் உட்புறம் செல்லச் செல்ல, துறைகளில் வெளிநாட்டு கப்பல்களின் கூட்டமே கண்ணில் படும். அப்புறம் கப்பல் அடையும் துறை, தாராளமாக இறங்கிக் கால் வைப்பதற்கு ஏற்ற மண் தரையே அன்று. வரிசை வரிசையாக ஜெட்டிகள் என்னும் விகடாகாரமான இரும்புத் தட்டுக்கள் பர்மாவின் மண் உடல்மீது தொங்கின. அப்பால் ஆபீசுகள், கச்சேரிகள், கடைத்தெரு, பஜார் இதன் ஊடே சென்று வங்காளி நண்பர் ஒருவர் வீட்டை அடைந்தேன். இவ்வளவு தூரம் வந்தும் ஓர் இடுக்கு வழியாக பர்மா தன் சுய உருவை எனக்கு காட்டவேண்டுமே, இல்லை. ரங்கூன் நகரம் பர்மா படத்தில் இருந்ததே தவிர பர்மா நாட்டில் இல்லை. அதாவது இந்நகரம் அந்நாட்டு மண்ணில் தோன்றி வளர்ந்த மரமே அன்று. கால வெள்ளத்தில் மிதந்து செல்லும் நுரைபோலவே, ரங்கூன் பர்மாவில் இருந்தால் என்ன வேறு நாட்டில் இருந்தால்தான் என்ன ; அது நாட்டு வளத்தில் முளைத்த நகரே அன்று. காலப் போக்கை அனுசரித்த கட்டிடக் காடே.

உலகத்தில் உண்டான நகரங்கள் யாவும், மனிதன் தன் ஆர்வத்தை யெல்லாம் கொண்டு நிருமித்தவை. ஒரு தில்லி, காசி, ஆக்ரா இவை யெல்லாம் மனிதன் உணர்ச்சி வசத்தில் ஈடுபட்டுப் படைத்தவை. ஆனால் வாணிபம் என்னும் திருமடந்தையோ கொடியவள். அவள் பாதங்களின் கீழ் மனிதனுடைய மானஸ ஸரஸில் தோன்றும் அழகுத் தாமரை பூக்கவே பூக்காது. இந்த வாணிபத்தின் குறிக்கோள் மனிதனே அன்று ; பொருள்தான் ! இந்தத் திருமடந்தையின் வாகனம் யந்திரப்பொறிகள். கங்கை வழியாக எங்கள் கப்பல் வரும்போது இந்த வாணிப இலக்குமி இழைத்திருக்கும் அலங்கோலங்களை நெடுகப் பார்த்துக் கொண்டே வந்தேன். வங்க நாட்டின் கண்ணுக்கினிய கங்கைக் கரையை இப்படி அழிக்கிறேமே என்று அந்தக் கொடியவள் துளியேனும் நினைத்தாளா ?



நான் ஒரு விதத்தில் அதிருஷ்டசாலியே. அவகேடான இந்தச் சடலங்கள் கல்கத்தா வரை வந்து செழுமையான ஊர்களை விழுங்குவதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் பிறந்தவன் நான். அந்தக் காலத்தில் கங்கையின் படித்துறைகள் நிழல் கவிந்த கிராமத்தின் கரங்கள் போல் கங்கையின் மார்பைத் தொட்டுப் பழகின. தண்ணிய மாலை நேரங்களில் படகுகள், மனிதர்களை ஏற்றிக்கொண்டு அவரவர் இடங்களில் சேர்ப்பித்தன. ஒருபுறம் வங்க நாட்டின் இதய ஓட்டம், மறுபுறம் அழியாக் கங்கையின் நீரோட்டம் ; இதற்கு இடையே விகாரமான இரும்புப் பற்களுடன் யந்திர அரக்கன் புகுந்து பாழாக்காமல் இருந்தான்.

அந்தக் காலத்தில் கல்கத்தாவின் அக்கம்பக்கத்திலேயே வங்கநாட்டின் உண்மை உருவை கண்ணாரப் பார்த்துக் களிப்படைவதற்கு விக்கினம் எதுவுமே இல்லை. கல்கத்தா தற்கால நகரமானாலும் குயிற்குஞ்சைப்போல் தன்னை வளர்த்து உருவாக்கிய செவிலியின் குரம்பையை அழித்து விடவில்லை. வாணிபப்பெருக்கம் உயர உயர நாட்டின் வடிவம் குன்றிப்போய்விட்டது. இன்று கல்கத்தா தன் தாயகமாகிய வங்காளத்தைப் புறக்கணித்து தனி வாழ்வு வாழ்கிறது. தேசத்திற்கும் காலத்திற்கும் இடையே மூண்ட இந்தப் போட்டியில் நாட்டின் பசுமைக்கவின் தோல்வியுற்றது. கால அரக்கனின் கோர உருவம் பற்களை நெறித்து கூர் உகிரைக்காட்டி வெம்மையாக மூச்சு விடுகிறது.

வாணிபம் ஓங்குமிடமே இலக்குமியின் உறைவிடம் என்று ஒரு சமயம் மனிதன் பாராட்டி வந்தான். அன்று மனிதன் வழிபட்ட தேவதை வெறும் செல்வம் மட்டும் அன்று. அழகுந்தான். இதற்குக் காரணம், வாணிபமும் மனிதத் தன்மையும் ஒன்றை ஒன்று பிரிந்து நிற்கவில்லை. நெசவுத் தறியோடு நெசவாளன், இரும்பு பட்டடையோடு கொல்லன் கருங்கை, நகாசு வேலையோடு அவ்வினைஞனுடைய ஒன்றிய மனம் இவை யாவும் வேற்றுமையின்றி

இணைந்தே விளங்கின. இதனாலேயே மனிதனின் உள்ளம் வாணிபத்தைக் கருவியாகக்கொண்டு செல்வத்தை விசித்திரமாக்கி அழகுகளை வெளிப்படுத்தியது. இல்லாவிட்டால் திருமடந்தைக்குத் தாமரை தவிசு எங்கிருந்து வரப்போகிறது? என்று யந்திரம் வாணிபத்தின் ஊர்தியாக மாறிற்றோ அன்றே அதன் அழகும் ஒழிந்து போயிற்று. பழமையான வெனிஸ் நகரையும் இன்றைய மான்செஸ்டர் நகரத்தையும் ஒப்பிட்டு நோக்கினால் நான் சொல்லுவது உங்களுக்குச் சுலபமாகப் புரியும். வெனிஸில் மனிதன் தன் கலை உணர்வினையும் ஐசுவரியப் பாங்கினையும் திறம்கொண்ட அளவு காட்டியிருக்கிறான். மான்செஸ்டரில் மனிதத்தன்மையைக் குறைத்துக்கொண்டு தன் யந்திர நுட்பத்தைத்தான் காட்டியிருக்கிறான். இதனாலேயே யந்திர வாகனம் கொண்ட வாணிபம் புகுந்த இடமெல்லாம் கறுமையும், அழுக்கும், கொடுமையும் கலந்த ஆற்றாமையே பரவியது. அப்புறமே ரத்தக் களரியும், கொலை களவும் உலகெங்கும் தலை விரித்து ஆடுகின்றன. மனித சமூகத்தில் சூதும், பித்தலாட்டமும் அதிகரித்தன. யந்திரத்திற்குப் பலியான உழைப்பாளியின் ரத்தம் புனித பூமியைக் கறைபடுத்தியது. அன்னபூரணியாக இருந்த வாணிபம் ஆகோர காளியாக மாறிப்போனாள். அன்னமிட்ட கரண்டி இன்று குருதி ஏந்தும் கப்பரையாகியது. அவளுடைய புன்முறுவல் பயங்கரப் பேய்ச்சிரிப்பாகியது. எப்படியாவது இருக்கட்டும், நான் சொல்ல வந்த விஷயம் என்ன? வாணிபம் மனிதனை உயர்வாக்காமல் அவனை அழுத்தி விடுகிறது.

ரங்கூன் நகரை என்னவோ நான் சுற்றிப்பார்த்தேன். ஆனால் அது மேல்வாரியாகக் கண்ணைச் செலுத்துவதே ஆகும். ஆழமாக விஷயத்தைப் பற்றும் பார்வையே அன்று. என் வங்க நண்பரின் உபசரணையைப் பற்றிய நினைவுகளை என்னுடன் கொண்டு வந்தேனே தவிர பர்மிய நாட்டின் கையிலிருந்து எந்தப் பரிசிலையும் நான் பெற



வில்லை. என் வார்த்தை மிகைபடக் கூறுவதாக நீங்கள் எண்ணலாம். இந்தக் காலம் எழுப்பிய பெரிய மதிலின் ஒரு கண்ணறையின் வழியாக பர்மா எனக்குக் காட்சி அளித்தது.

திங்கட்கிழமை யன்று காலை, நண்பர்கள் என்னை இங்குள்ள பிரசித்தி பெற்ற புத்த ஆலயத்திற்கு அழைத்துச் சென்றனர்.

பார்க்கவேண்டிய அபூர்வமான காட்சிகள் இருந்தன. இதுவரை நான் தங்கி இருந்த இடம் பர்மா உடலுக்கு ஒத்து இராத ஓர் அவயவமென்றே சொல்ல வேண்டும். இப்பொழுது நான் பார்த்தவை தனி எழில் கொண்டு விளங்கின. என் மனத்திற்கு அளவற்ற இன்பத்தைத் தந்தன. தற்கால வங்காளிக் குடும்பங்களில் 'பாஷனில்' ஊறிய மாதரை அடிக்கடிப் பார்க்கிறோம். அவர்கள் 'டாக்டக்' என்று நடக்கிறார்கள். படபடவென்று ஆங்கிலம் பேசுகிறார்கள். இதைப் பார்க்கும்போது ஒரு பெருங்குறை என் மனத்தை பாதிக்கிறது. வங்க நாட்டுப் பெண்மையின் அழகைவிட நவநாகரிகத்தின் பகட்டே இத்தகையோரிடம் அதிகமாகத் தென்படுகிறது. இந்தச் சமயத்தில் தற்செயலாக இனிமையும் மடமையும் மென்மையும் சேர்ந்த வங்க ரமணீமணிகளைக் காண நேரிட்டால் என்ன நினைவு எனக்கு வருகிறது தெரியுமா? நான் பார்ப்பது கானல் நீர் அன்று, கண்கவின் கொள்ளும், ஆம்பல் பூத்தசையும் பளிக்குநீர்ப் பொய்கையே! இந்த பௌத்த ஆலயத்துள் நுழைந்ததும் என் உள்ளம் ஆனந்தக் கடல் ஆடியது. அது எப்படியோ, நான் ஏமாற்றம் அடையவில்லை. ரங்கூனில் நான் பார்த்த எல்லாவற்றையும்விட இதற்குள்ள மதிப்பு மிக உயர்வானது. வெண் சுதை அரமியங்கள் இதன் எதிரே எம்மாத்திரம்? நெடு நாளைய பர்மா நாட்டு ஆன்மா இவ்வழகிய சிற்பத்திலும், அமைப்பிலும், பொலிவிலும் தன்னை வெளிப்படுத்திக்கொண்டது. புதுமை ரங்கூனை விட்டு பழமை மிகுந்த இந்த ஆலயத்தைப் பார்க்

கும்போது, கண் கூசும் வெயில் ஒளியிலிருந்து தண் நிழலுள் தங்குவது போலவே இருந்தது. படிகளின் வரிசை கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து கொண்டே போகிறது. உச்சியில் ஸ்தூபம் கவிந்த மண்டபம். படிகளின் இருபக்கமும் பூ, பழம், சாம்பிராணி வர்த்தி, பூஜைக்குரிய பொருள்கள் இவற்றை விற்கும் அங்காடிகள். விற்பனை செய்பவர்கள் அத்தனை பேரும் பர்மியப் பெண்கள். பூவின் நிறங்களோடு போட்டி இட்டன இவர்கள் அணிந்த பட்டுச் சீரைகள்; இத்துடன் சூரிய அஸ்தமனத்தின் மஞ்சள் வெயிலும் கோயிலின் இருண்ட நிழலும் கலந்து விசித்திர லோகத்தை சிருஷ்டி செய்தன. கோயிலானாலும் இங்கே பொருள்களை விற்பனை செய்வதற்கு எந்தத் தடங்கலு மில்லை. அலங்காரமான சீமைச் சாமான்களை விலையாக்கும் முஸல்மானின் கடைகளும் உண்டு. மச்ச மாமிசக் கடையும் இராமல் போகவில்லை. ஆலயத்தைச் சுற்றிலும் சம்சார வாழ்க்கை, அதன்பாட்டிற்கு நடந்துகொண்டே இருக்கும். லௌகீகமும், தெய்வீகமும் இந்த இடத்தில் ஒன்றிலே ஒன்று தோய்ந்து கிடந்தன. ஆனால் சந்தைக் கடையின் இரைச்சல் இங்கே இல்லை. நிச்சப்தம் இராது போனாலும் ஏகாந்தம் இருந்தது. மோனம் திகழாமல் இருந்தாலும் அமைதி குடிகொண்டிருந்தது. என்னுடன் பர்மா நாட்டினரான பாரிஸ்டர் ஒருவர் கோயிலுக்கு வந்திருந்தார். இப்படி தேவஸந்நிதிக்கு எதிரே மாமிசங்களை விற்கிறார்களே இது ஏன் என்று கேட்டதற்கு, அவர் தந்த பதில்— ‘புத்தன் எங்களுக்கு அறிவித்துள்ளார்; மனிதனுக்குரிய நலனோ அவனை இறுகப்பிடிக்கும் பந்தமோ ஒன்றும் கிடையாது. அதனால் எவரையும் வலுக் கட்டாயமாக சீர்ப்படுத்த விரும்பவில்லை நான். அதிகாரத்தைச் செலுத்தாதது தான் நன்மை. உள்ளம் தூண்டிய வழியே போவதில் தான் மோட்சம். இந்த வாக்கை அனுசரித்தே நாங்கள் சமூகத்திலும் சரி, கோயில் விஷயங்களிலும் சரி, அதிக ஆசாரம் பார்ப்பதில்லை.’ படிகள் ஏறி மேலே சென்றேன்.



அங்கே விசாலமான திறந்த முற்றம். மூலைக்கு மூலை சின்ன அளவில் பலரகமான கோயில்கள். காம்பீரியத்துக்குப் பதிலாக நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகளே அதிகம். எல்லாம் பிள்ளைகள் விளையாடும் பொம்மைச் சாமான்களாகவே தோன்றின. இதைப்போன்ற அற்புதக் கலம்பகத்தை நான் வேறு எங்கும் கண்டதில்லை. குழந்தைத் தாலாட்டில் வரும் வர்ணனைகள் போல் விசித்திரம் நிரம்பி இருந்தன. சிற்பங்கள் ஒரே நடையில் அமைந்திருந்தாலும் மனத்திற்கு எவை தோன்றுகின்றனவோ அவை யாவும் இங்கே உருவெடுத்தன.

மிகப் பழமையான சிற்பப் பொருள்களோடு சஸ்தா கலைப்பொருள்கள், இங்கு இழைந்து இருந்தன. கலை உணர்வுக்கும் உயர்ந்த பாவத்திற்கும் முரணானவை எவை என்பது இவர்கள் அறிவுக்கு எட்டாத விஷயம். கல்கத்தாவில் நடக்கும் பெரிய மனிதர் வீட்டுக் கல்யாணகோலம் தெருவில் செல்லும்போது, அபஸ்வரம்போல ஒற்றுமையே இராத அலங்காரக்குழப்பமாகவே கண்ணில் தென்படும். பொருளை ஆடம்பரமாக அடுக்குவதில்தான் அவர்கள் நோக்கெல்லாம்; ஒழுங்குபடுத்தும் அழகில் அல்ல. இதுவும் அதைப்போலத்தான். ஒரு வீட்டில் அநேக சிறுவர்கள் இருந்தால் அவர்கள் செய்யும் கொம்மாளமே அதிகமாக இருக்கும். குதூகலமாகக் கூச்சலிடுவதே இவர்களுக்கு ஆனந்தம். இந்த ஆலயத்தில் தென்படும் அலங்காரங்களும் படிவ வழிபாடும், சிறு பிள்ளைகள் நடத்தும் உற்சவ ஆர்பாட்டம் போலவே இருந்தன. கோயிலின் மேலே பளபளக்கும் பொன் வேய்ந்த தூபச் சிகரங்கள், பர்மியச் சிறுவர்கள் கை கொட்டிச் சிரிக்கும் சந்தோஷக் கூச்சல் போலவே அலைஅலையாக ஆகாயத்தை நோக்கி எழுந்தன. எப்பொருளையும் அதன் ஆழம்வரை ஆராய்ந்து பார்க்கும் முதிர்ந்த வயது இவர்களுக்கு இன்னும் வரவில்லை போலும்.

நல்ல நிறம் வாய்ந்த பெண்களே அதிகமாகக் கண்ணில் படுகின்றனர். கிளை கிளையாக நாடெங்கும் பரவி

இவர்கள் பூத்து விளங்குகின்றனர். பர்மா எங்கும் இந்தப் பெண் மலர்கள் தானோ என்று ஐயம் கொள்ளும் அளவு காட்சி அளிக்கின்றனர். இந் நாட்டு ஆடவர்கள், ஆலசிய சுபாவம் உடையவர்கள். எப்பொழுதும் ஓய்வில் விருப்பம் கொண்டவர்கள் என்று சொல்லக் கேட்டேன். ஆடவர் செய்யும் காரியங்களை பெண்களே செய்துவிடுகிறார்களாம். ஒரு வேளை பெண்களை இவ்வாறு வருத்தி ஆடவர்கள் தம் அதிகாரத்தை செலுத்துகிறார்களோ என்ற எண்ணம் வருகிறது. ஆனால் இவ்வாறு செய்வதனால் விளைவு நேர்மாறாக முடிகிறது. உடல் உழைக்கும் தென்பினால், இந் நாட்டு பெண்பாலார் இன்னும் செவ்வியுடன் விளங்குகின்றனர். வெளியில் உல்லாசமாக உலாவச் செல்வது சுதந்திரமாகி விடாது. சளைக்காமல் வேலையை ஆற்றுவதில் தான் பெரியதோர் விடுதலை உணர்ச்சி ஏற்படுகிறது. பிறர் கீழ் அடங்கி இருப்பது பெரும் பந்தம் ஆகாது. தொழிலின்மையே ஒருவனை ஆழ்த்தும் இருண்ட சிறையாகும்.

இந்நாட்டு மடந்தையர் இத்தகைய சிறையிலிருந்து வெளியேறி, நிறைவும் தன்மானமும் பெற்று உலாவுகின்றனர். பெண்கள் என்று அவர்கள் தம்மைத் தாழ்வாக நினைத்துக் கொள்ளவில்லை. வனப்பில் இவர்கள் எவ்வாறு காமருபூங் கொடியினை ஒத்திருந்தனரோ அவ்வாறே உடல் வன்மையிலும், யதேச்சையிலும் மாண்பெய்தி நின்றனர். உடல் உழைப்பே பெண்களின் அவயவங்களுக்கு அரியதோர் சாயலைத் தருகிறது. இதை நான் ஸந்தால் மக்களிடையே முதன் முதல் கவனித்தேன். இவர்கள் சலிப்பின்றிக் கடினமான வேலைகளைச் செய்வார்கள். கல்தச்சன் உளியினால் ஓங்கி அடித்து அடித்து வெறுங்கல்லை அழகிய சிலையாக மாற்றுவதுபோல், சிரமமான வேலையில் பதம் பெற்று ஸந்தாளிப் பெண்ணின் உடல், திரண்டு மழுமழுப்பாகிறது. நடையில் யதேச்சைத்தன்மை மலர்கிறது. கவி கீட்ஸ் சொல்லுகிறார்—'உண்மைப் பொருளே அழகிய பொருள்' என்று. பந்தத்தை மீறிய உண்மையின் நிறை



வான வடிவே முருகு. உபனிடதவாக்கிலும் இந்த உண்மை வெளியாகிறது—'அனந்த ரூபம் அம்ருதம் யத்விபாதி.' எங்கும் நிறை பொருள் உருகொள்ளும்போது அதனுடன் அழியா அமுதச்சுவையும் இன்பப் பொலிவும் தோன்றுகின்றன. மனிதன் அச்சத்தாலும், ஆற்றாமையினாலும் பொறாமையினாலும், அறிவின்மையினாலும், குறுகிய நோக்கத்தாலும் இந்நிறைவின் மலர்ச்சியை நசுக்கிவிடுகிறான்; அழகை நாசம் செய்யும் தன் கைத்திறமையைப் பெரிதாக மெச்சிப் பெருமிதம் கொள்கிறான்.

# 5. இயற்கையும் பினாங்கும்

29-ஆம் தேதி, வைகாசி. மாலைநேரம், எங்கள் கலம் பினாங் துறைமுகத்தை நண்ணும்பொழுது, என்னுடன் வந்திருக்கும் சிறுவன் முகுல், "பூகோள விவரணையில் நான் படித்தேனே அந்தச் சிங்கப்பூர் பினாங்கா இது?" என்று கேட்டான். படத்தில் பினாங்கை எளிதாகப் பார்த்துவிட முடியும். ஒரு சின்னப் புள்ளிதான். உபாத்தியார் மாப்பில் விரலை இழுத்து நமக்குக் காட்டுவார். அதேபோல் என் எதிரே தென்பட்ட பினாங், கப்பலிலிருந்து காண்பதோடு முடிந்துவிடுகிறது.

எதிலும் வெகுவாய் ஈடுபாடில்லாத அனுபவம் பயணத்தில் ஏற்படுகிறது. உட்கார்ந்த இடத்திலேயே வேடிக்கையான கனவுகள் காண்பதுபோலவே இந்நுகர்ச்சியும். முயற்சியோ, எண்ண விசாரமோ இன்றி, காட்சிகள் தாமாக நம் எதிரே முளைப்பதைப் பார்த்து இன்புறலாம். ஆனால் இந்த நாடுகளைக் கண்டுபிடிக்க, போக்குவரத்திற்குச் சாதகமாக வழி துறைகள் அமைக்க, மனிதன் என்ன அரும் செயல்கள் இயற்றி இருக்கவேண்டும்! நாம் எந்தத் தொந்தரையுமின்றி உலகைச் சுற்றிவருகிறோம். பாடுபட்டவர் அவர்கள், இன்பம் நுகர்வர் நாம். அவர்கள் வளர்த்த மரத்தின் கனியை, தோல், கொட்டை இவற்றின் உபத்திரவங்கூட இல்லாமல் புசிக்கிறோம். கரையற்ற கடல் பொங்கிப் பொங்கி வழிந்தது. திசைகள்தோறும் மேக விதானம் மெல்லச் சுருட்டிக்கொண்டது. மனிதன் மீறிச் செல்வதற்கு இயலாத நீர் அரண் என்முன் விரிந்தது. இன்னும் அதன் உக்கிரம் அடங்கவில்லை. காட்சிச்சாலையில் புதிதாக வந்திருக்கும் சிங்கம்போல் முந்நீர் உறுமிற்று. தன் அலைப்பிடரியை உருட்டியது. அச்சம் தருவதாயிருந்தாலும் அதைப் பார்க்க எனக்கு அடங்காத ஆவல்.

அரபிக்கதையில் அலாதீனின் மாய விளக்கைப்பற்றி வாசித்திருக்கிறேன். அதைப்போல் ஒரு விளக்கு என்



னிடமும் இருக்கக்கூடாதா என்று அச்சிறு பிராயத்தில் எண்ணுவேன். இந்த மாய விளக்கின் வேலைதான் நிமிடத்திற்கு நிமிடம் என் கண்முன் தோன்றும் காட்சி. வானிலும், கடல் நீரிலும், நிலமிசையும் இந்த மாயவிளக்கை யாரோ தேய்க்கிறார்கள். கட்புலனுக்கு எட்டாதது, எதிரே வந்து நிற்கிறது. தொலைவானது, அருகில் வருகிறது. நாம் என்னவோ ஒரே இடத்தில்தான்—அதே கப்பலில்—இருக்கிறோம். இடங்கள், நம்மை நோக்கி விரைந்து வருகின்றன.

மனிதன், பயனில் கருத்துடையவன் மட்டுமல்ல; பயன் கொள்ளச் செய்வதே அவனுடைய பெரிய வேலை. இதோ நான் பயணம் செய்கிறேன். என் மனத்துள் எத்தனையோ அநுபவங்கள் சேர்கின்றன. அதில் ஒன்று, நான் பயணமே செய்யவில்லை என்ற உணர்வுதான். கடல் மார்க்கமாக வரும்பொழுது இடை இடையே, தூரத்தில் இங்குமங்கும் குன்றுகள் தோன்றின. அவற்றின் முடி முதல் அடிவரை மரங்களின் பைந்நிறப் போர்வை.

அரக்கர் உலகைச் சேர்ந்த பயங்கர ஜீவன்கள், உடலெங்கும் பச்சைநிற உரோமம் சிலிர்க்க, குளிருக்காக வெயிலில் காய்வனபோல் இருந்தன. இக்குன்றுகளின் வளம் சிறுவன் முகுலின் மனதை ஈர்த்தது. "இந்தக் குன்றிலேயே நாம் தங்கிவிட்டால் என்ன!" என்றான். இதுவே உண்மை யாத்திரிகனின் மனப்போக்கை வெளிப்படுத்தியது. குன்றுருவுள்ள இந்தத் தீவுகளின் பெயர் எனக்குத் தெரியாது. அவ்வளவு ஊன்றி மாப்பிலுள்ள பெயர்களை யார் கவனிக்கப் போகிறார்கள்? சலனமின்றி, பாவம், அவைபாட்டில் தலையை நீட்டிக்கொண்டிருந்தன. ஸர்குலேடிங் லைப்ரரியிலுள்ள புத்தகங்கள்போல் பல கைகள் மாறி மாறி உருமாறிவிடவில்லை. அதனாலேயே நம் உள்ளத்தை கவர்கிறது இந்த இயற்கை எழில். மனிதன் கண்ணுக்கு எதுவும் சகிப்பதில்லை. கன்னியாக நிற்பதைக் கட்டழிப்பதில்தான் அவனுக்கு ஆசை. தனக்கெனக்

கவர்ந்துகொள்வதில், இன்பத்தைவிட பெருமிதமே அவன் அடைகிறான்.

பகலவன் தாழும்பொழுது, பினாங் துறையில் கப்பல் வந்து தங்கியது. அந்த அந்திப்பொழுதில், இவ் வையகம் போல் அழகியது வேறில்லை யென்ற எண்ணம் உதித்தது. நீரும் நிலமும் ஒன்றையொன்று காமுறும் காட்சியைக் கண்டேன். மானிலம் தன் இருகைகளால் ஸாகரத்தை அணைத்துக்கொள்கிறது. மேகத்திலிருந்து சிதறி வரும் மஞ்சள் ஒளி பச்சைக் குன்றுகள்மீது பொற்றாளைபோன்று படிந்தது. நாண மிகுதியால் குன்றுகள் அம்மேலார்ப்பில் தம் முகத்தை மறைத்துக்கொண்டன. வான், புவி, கடல் இவற்றின் தங்கத்தோரண வாயில்கள் வழியாக அமரர் உலகின் ஆனந்த கீதம் ஒலித்தது.

சீலை ஊதிய தோணிகளை ஒத்து, மனிதன் படைத்தவை சொற்பமே. இயற்கையின் சந்தத்தோடு இழைந்துபோகும் போது மனிதன் ஆக்கிய பொருள்கள் அழகில்லாமல் ஏன் போகும்? மனிதன் ஆக்கிய மரக்கலம், காற்று, கடல்நீர் இவை மூன்றும் ஒன்றுபட்டால்தான் அழகு மலரும். யந்திரத்தால், இயற்கையைத் தூக்கி எறிந்து, மனிதன் எதிர்ப்பைக் காட்டுவதனால் அவன் படைத்த பொருள்கள் விகாரமாகத் தோற்றுகின்றன. பாய்மரக் கப்பலைவிட நீராவிக் கலத்தினால் எவ்வளவோ அநுகூலம் உண்டு. ஆனால் அழகு இல்லை. ஸ்டீமர், மெல்லத் துறையை அணுகும்பொழுது இயற்கையைவிட மனிதனின் பொல்லாத தன்மையே கண்ணில் பட்டது. வளைந்து திசை முடிவை முத்தமிடும் ஆகாயத்தின் குறுக்கே மனிதன் எழுப்பிய புகைக்குழாய் அவலட்சணம்போல் நெறிப்புடன் நிற்கிறது. கடற்கரை ஓரமெங்கும், துறைகள்தோறும், நரனுடைய ஆற்றாமையே சிறிதும் வெட்கமின்றி அமரர் ஆக்கிய அழகிய இயற்கையை ஏளனம் செய்கிறது. இதனால், அவன் என்றென்றும் அமர வாழ்வை இழக்க நேரிடுகிறது.



# 6. வானும் கடலும்

ஆனி 2-ஆம் தேதி. மேலே ஆகாயம், கீழே கடல்; இரவு பகல் என் கண்ணில் படுபவை இவை இரண்டுமே. நம்முடைய கண்கள் மாநிலத் தாயின் ஆதரவைப் பெற்றுப் புஷ்டியானவை. பல ரகமான, பல சுவையான காட்சிகளை அவள் அள்ளித் தருகிறாள். அவற்றில், தொட்டுப்பாராமல் எத்தனையோ உருசியுள்ள விஷயங்களை எறிந்துவிடுகிறோம். எதுவும் அளவற்று இருந்தால் அலட்சியம் செய்துவிடுகிறோம். நிலக்காட்சிகளைப் பார்த்துத் தெவிட்டிப்போன நம் விழிகளுக்கு நடுநடுவே சமுத்திரப் பயணம்போன்ற உபவாசம் நன்மையையே தரும்.

என் எதிரே, என் கண்களுக்கு நிறை உணவிட்ட இரு பெரிய தட்டுக்கள் - வானும் வாரிதியும். நிலத்தின் சூழ்நிலையிலேயே பழகிப்போன நமக்கு இவை முதலில் வெறும் தட்டுக்களாகவே தோன்றும். நாலைந்து நாட்கள் பட்டினி கிடந்தவுடன், நல்ல பசி எடுத்தவுடன், இவை வெறும் பாத்திரங்கள் அல்லவெனத் தெரியும். நிமிடத்திற்கொரு மேனியாய், பொழுதொரு வண்ணமாக மேகங்கள் தென்படும். உதயத்திலிருந்து அத்தமனம்வரை பகல் ஒளியின் விசித்திர நிறங்கள் வானிலும், கடலிலும் தம் மாயாஜாலத்தைக் காட்டும்.

மண்ணகத்தின் மடிமீதே தவழ்ந்து விளையாடும் நாம் ஆகாயத்தை எப்போதாவதுதான் நோக்குகிறோம். வான வெளியை வெறிச்சிடும் சூனியமாகக் கருதுகிறோம். ஆனால் இந்த வானின் முகத்தையே சில நாட்கள் வரிசையாக நோக்கும் வாய்ப்பு இருந்தால், அந்த அறிமுகத்தில் விசித்திரங்கள்தாம் எத்தனை? காரணமின்றி பலவிதக் கோலங்களைப் புனைகிறது மேகம். எத்தனையோ நிறச் சாயல்களை அணிகிறது வானவெளி. ராக ஆலாபனையில் உள்ளது போல் எத்தனையோ அலங்கார வரிசைகள், வர்ணமெட்டுகள், ஸ்வர மூர்ச்சனைகள் இந்தக் காட்சியில் வெளியாகும்.

ஆனால் இதற்குத் தாள அளவோ, பல்லவிக் கோப்போ, தானலயமோ இல்லை; மனம் போனபடி மாறும் ஸ்வர லீலை தான். இதற்கு ஏற்ப கடல் அப்ஸர நடனம் ஆடுகிறது; சீர்படாத சந்தக்கட்டில். கடல் வாசிக்கும் மிருதங்க ஜதிகள் எத்தனையோ சிக்கலான தாள லயத்தைச் சேர்ந்தது. அந்த ஜதியின் நடனத்தில் உல்லாசமே தென்பட்டது; ஒரு நியமத்தைப் பின்பற்றியதாயில்லை.

விசாலமான அரங்குபோன்ற ஆகாயமும், சமுத்திரத்தின் கூத்துக் களமும் வரவர நமக்குப் புது அழகுகளைக் காட்டுகின்றன. உலகத்தில் பெருமை மிக்கவற்றுள் ஆடம்பரமே இருக்காது. அதன் பகைப்புலனும் சாதாரணமாகவே தோற்றும். தன்னைப் பிறர் காண்பதற்கு அது எந்தவிதமான பகட்டையும் கொள்ளாது. இரவில் நாம் பார்க்கும் நக்ஷத்திர சபை, எல்லையற்ற இருளில்தான் கூடுகிறது. வான் கடல் இவையும் தம்மை அதிகமாக வெளிப்படுத்தித் தம் கௌரவத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை. இந்த யாத்திரையில் மற்றொரு சௌகரியம்; கண்ணுக்கு வெறுப்பை மூட்டும் விஷயங்கள் எவையும் என்முன் நிற்கவில்லை. இங்கிலாந்துக்குச் சென்றபோது, கப்பலில் கூடியிருந்த யாத்திரிகர்களே தனிக் காட்சியாக விளங்கினர். பாட்டும், கூத்தும், வேடிக்கையும், விளையாட்டுமாய் இவர்கள் பொழுதை வீணாக்கினர். இயற்கையில் துளியேனும் இவர்களது மனம் ஊன்றவில்லை. இந்த யாத்திரையில், கப்பலுக்கும் சுற்றி இலங்கும் இயற்கைக் காட்சிக்கும் இடையே பகை சிறிதும் இல்லை. பிரயாணிகளும் அதிகமில்லை. நாங்கள் நாலுபேர். இன்னும் இரண்டொருவர் இருந்தனர். அவர்களும் அமைதியை விரும்புபவர். இஷ்டமானபொழுது சாப்பிடவும், தூங்கவும், குளிக்கவும் முடிந்தது. எங்களைத் தடுப்பவர் யார்? பிரயாணிகளில் பெண்பாலார் எவரும் இல்லை, எங்களால் இடையூறு என்பதற்கு.

அன்றாடம், உலகில் நிகழும் கதிரவன் எழுச்சியும்,



மறைவும் அற்ப விஷயமன்று; இதை வரவேற்ற மண்ணவரும் விண்ணவரும் கூடிச் செய்யும் ராஜமரியாதை வியக்கத்தகுந்தது. இளங் காலையில் மாநிலம் தன் போர்வையைக் களைந்துவிடுகிறது. அதன் குரல் பறவையின் இசையில் ஒலிக்கிறது; அந்திப்பொழுதில் அமரர் உலகின் திரை விலகுகிறது; வான விளக்குகள் வையகத்தவருக்கு சமிக்ஞை அனுப்புகின்றன. மண்ணும் விண்ணும் ஒன்றையொன்று நோக்கி மோனமொழியில் உரையாடும் அபூர்வ சித்திரம், வானுக்கும் கடலுக்கும் இடையே நிற்கும் என்னை வியப்பில் ஆழ்த்துகிறது.

திசை முடிவிலிருந்து முகில்கள் வெவ்வேறான வடிவில் எழுந்து நெடுவானை நோக்கி விரைந்தன; சிருஷ்டிகர்த்தாவின் முற்றத்தில் ஊற்றுக்குழாய் பொழியும் நீர்த்திவலையோ இவை! வெறும் ஆவியானாலும், உருவில் இவை ஒன்றைப்போல் ஒன்று இல்லை. ஒழுங்கிற்கு உட்படவில்லை இந்த மேகங்கள். நேர்க்கோடு இயற்கையில் தென்படாது; அது மனிதனின் கைவேலை. வீட்டின் சுவரிலும், தொழிற்சாலையின் புகைச் சிமினியிலும், மனிதன் தன் வெற்றித்தூணை நேர்க்கோடாக அமைத்துள்ளான். வளைந்தகோடு வாழ்க்கைக்குரியது. அதை வரையும் வித்தை மனிதனுக்கு எளிதில் வராது. நேர்க்கீற்று ஜடமான ரேகை; அது மனிதன் ஆளுகைக்கு அடங்கியது. மனிதனுடைய சுமையைத் தாங்குகிறது; அவன் இயற்றும் அட்டூழியங்களைச் சகித்துக் கொள்கிறது.

மேகத்தின் வடிவங்கள் தாம் எத்தனை என்றால்; வர்ணங்களோ எண்ணற்றவை. நிறத்தில் எத்தனை கலவை உண்டோ அத்தனையும் பார்க்கலாம். கீர்த்தனையில் வரும் சங்கதிகள்போல் படிப்படியாக நிறத்தின் சாயல்களும் இருந்தன. ஒன்றுக்கொன்று முரண்படவில்லை. ஆனாலும் விசித்திர வேற்றுமை கொண்டிருந்தன. சூரிய அஸ்தமனமாகும் வேளையில் மேற்கு வானில் வாரி அள்ளி விட்டிருக்கும் வர்ணக்கோலமும் கீழ் வானில் அமைதியும்,

அடக்கமும், மென்மையும், ஆழமும், இயற்கை தேவி தன்னால் முடிந்தவரை வழங்குவதுதான் ஆச்சரியம். ஒரே காலத்தின் இருவித விந்தைக் காட்சிகளை இடதும் வலதுமாக நம் கண்முன் நிறுத்துகிறாள். ஏககாலத்தில் ஜாவளியும் பாடுகிறாள்; உயர்ந்த கீர்த்தனையையும் பாடுகிறாள். வெவ்வேறு வகையானாலும், இவை ஒன்றுக்கொன்று அழகில் குறைந்துவிடவில்லை.

நீரில் பிரதிபலித்த நிற விசித்திரத்தை என்னவென்று உரைப்பேன்! வானில், அமைதிக்குமேல் உயர்வினும் உயர்வான வர்ண பேதங்கள் தோன்றும் சமயம், கடலில் சிறு அலைகளின் அசைவில் அணுவுக்கும் அணுவான நிறச் சிதைவுகள் தென்படுகின்றன. நாம் அடையும் வியப்புக்கோர் எல்லை இல்லை.

வானிலும் கடலிலும் கொட்டாட்டுப்பாட்டாக ருத்திரனாரின் தாண்டவ எழிலை முன்னே கண்டோம். நேற்று அவர் உடுக்கை இசைத்து, சடைவிரிகோலத்துடன், வீரச்சுவை ததும்ப அட்டஹாசம் செய்த கோலம் வேறுவிதமாகவே இருந்தது. காலையிலேயே வானெங்கும் கருமுகிலும் வெண்முகிலும் புகைபோல் சூழ்ந்துகொண்டன. கனத்த மழை கொட்டிற்று. கப்பலை வளைத்து வளைத்து மின்னொளி வாள்போல் பாய்ந்து விளையாடிற்று. அதன் பின்னாலேயே அண்டம் கிடுகிடுக்கும் இடியின் கர்ஜனை. ஒரு மின்னற்பிழம்பு என் எதிரே கடல் நீரில் சரேலென்று விழுந்தது. நீரிலிருந்து பாம்பு உயிர்ப்பதுபோல் ஆவித்திரள் எழுந்தது. காலபைரவன், ஸ்விட்ஜர்லாந்தின் லட்சிய வீரனான வில்லியம் டெல் என்பானைப்போல் தம் அற்புத வில் விறலைக் காட்டினான். அவன் எய்த பகழியொன்று கப்பல் கூம்பொன்றைச் சேதப்படுத்தியது. ஆனால் நாங்கள் தப்பித்துக்கொண்டோம். எங்களோடு நின்ற மற்றொரு ஸ்டீமரின் கூம்பை அந்த வாளி, பழுதாக்கியதெனத் தெரிந்தது. இவ்வளவு விபத்துக்கிடையே அற்பப் பிராணியான மனிதன் பிழைத்துவருவதுதான் மிக ஆச்சரியம்!



# 7. மனிதத் தன்மை

ஒரு ரசமான கதை. இரான் அரசர் இங்கிலாந்து சென்றிருந்தார். உணவைக் கையால் எடுத்துச் சாப்பிடும் வழக்கத்தைப் பற்றித் தம் ஆங்கில நண்பர் சிலருடன் பேசுகையில், 'கரண்டியும், குத்தியும் உபயோகித்து உணவைக் கொள்வதில் இன்பமே இல்லை. தரகன் மூலமாக விவாகம் செய்துகொள்பவனுக்கு, மணமகளுடன் பழகி மன்றலயர்வதிலுள்ள ஆனந்தம் எங்ஙனம் தெரியும்? உண்டியைக் கைவிரல்களால் தொடும்போதுதான் போஜனத்திற்கே தனிச்சுவை பிறக்கிறது' என்றாராம். அதேபோல் கப்பலில் இருந்தவாறே ஜப்பானியச் சுவையை நான் பெறலானேன். பிரெஞ்சுக் கப்பலில் ஏறி ஜப்பானுக்குப் போகலாம்; ஆனால் விரலால் தொட்டு நேராகப்பழகும் அனுபவம் அதில் இருக்காது.

இதற்குமுன் ஒரு சமயம் சீமை நாவாய் ஒன்றில் நான் கடல் பயணம் சென்றிருக்கிறேன். ஆனால் அந்தக் கலத்திற்கும் இந்த ஜப்பான் கலத்திற்கும் எவ்வளவோ வேற்றுமை. சீமை நாவாயின் காப்டென் வெறும் கடமையாற்றும் அதிகாரிதான். யாத்திரிகர்களுடன் வேடிக்கையாகப் பழ்கவோ, சிரிக்கவோ, சாப்பிடவோ மாட்டார். தனிப்பட்டு எப்போதும் கடுமடுவென்று முகம் சிவக்க நிற்பார். இந்தச் சீமைக் காப்டென்கள் ஒருவராவது என் ஞாபகத்தில் வரவில்லை. ஏனென்றால் அவர்கள் கப்பலின் ஓர் உறுப்பாக இருந்தனரே தவிர மனிதர்களாக நடந்துகொள்ளவில்லை. கப்பல் பயணம் முடிந்ததும் அவர்களுடைய தொடர்பு அறுந்து போய்விட்டது. ஒருவேளை நான் வெள்ளைக்காரனாக இருந்தால், தம் இனத்தவரென்று சுமுகமாக நடந்துகொண்டிருப்பாரோ என்னவோ! ஆனால் இந்த ஜப்பானியக் கப்பலில் நான் ஒரு வேற்று மனிதன் தானே. வெள்ளைக்காரனுக்கு நான் எப்படி விதேசியோ, ஜப்பான்காரனுக்கும் அந்நியன்தானே.

இந்தக் கப்பலில் ஏறியதிலிருந்து நானும் கவனித்து வருகிறேன், எங்கள் காப்டென் அதிகமாக காப்டென் மிடுக்குகளைக் காட்டவே இல்லை. சாதாரண மனிதரைப் போலவே எல்லோருடனும் பழகி வந்தார். உயர்வு தாழ் வென்னும் நினைப்பு கப்பல் உத்தியோகஸ்தர்கள் வரைக் குமே தவிர, பிரயாணிகள் விஷயத்தில் சிறிதேனும் இல்லை. வேலையின் மும்முரத்தில்கூட அவருடைய அறைக்குச் சென்றிருக்கிறேன்—கொஞ்சமாவது அவர் முகம் சிடுத்துக் கொள்ளவேண்டுமே—அவர் பேச்சிலும், நடைமுறையிலும் மனிதனுக்குரிய மேன்மை வெளிப்பட்டது. இந்த யாத் திரையோடு அவருடன் உடல்தொடர்பு நீங்கிவிடும். ஆனால் அவர் உளப்பான்மை மட்டும் என் நெஞ்சை விட்டு அகலாது.

எங்கள் தேவைகளைக் கவனிக்கும் ஸ்டீவர்ட்டுகூட காரியச் சுழலுக்கிடையே இன்முகம் காட்டுவார். நாங்கள் எங்களுக்குள் தாமாஷாக உரையாடும்போது, அவரும் கலந்துகொண்டு தம் ஓட்டை ஆங்கில மொழியில் ஏதாவது பேசுவார். முகுல் சித்திரம் வரைவான்; நடுநடுவே அவ னுடைய காகிதத்தில் அழகான ஓவியங்களைத் தீட்டுவார்.

கப்பலின் கஜானுக்காரர், ஒரு நாள் என்னை அணுகி, ‘ரொம்ப நாளாக என் மனசில் சில சந்தேகங்கள் உண்டு; உம்மோடு ஆலோசனை செய்யவேண்டுமென்ற எண்ணம்; எனக்கு இங்கிலீஷ் நன்றாகப் பேச வராது. உமக்குச் சிரம மிராது போனால் காகிதத்தில் என் சந்தேகங்களைக் குறித் துத் தருகிறேன். சௌகரியம்போல் விடை எழுதித் தர வேண்டும்’ என்றார். சந்தேகம் வேறொன்றுமில்லை. அரசிய லுக்கும் சமூகத்திற்கும் உள்ள சம்பந்தம் என்ன, இதைப் போன்ற ஆழ்ந்த சமசியைகளைப்பற்றியதுதான். வேறு கப்பல்களில் கஜானுக்காரர் இப்படி வேலைக்குப் புறம்பான விஷயங்களோடு தம் மண்டையை உடைத்துக்கொள்வா ரென்று எனக்குத் தோன்றவில்லை. எத்துறையிலும் புதிய விழிப்புகொண்டவர்கள் ஜப்பானியர். ‘எப்பொருள் யார்வாய்



கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு’ என்ற பேருண்மையை உணர்ந்தவர்கள் இச்சாதியினர். புதிய பொருள்களைக் கண்டால் சிறு பிள்ளைகள் எவ்வாறு ஆவல்கொண்டு தொட்டுப்பார்க்க ஓடி வருகிறார்களோ அவ்வாறே புதிய ‘ஐடியா’ (பாவம்) க்களைத் தேடி அலை கின்றனர் இவர்கள்.

என் கண்ணைக் கவர்ந்த மற்றொரு விஷயம். முகுல் பையன், அவன் ‘டெக்’ பிரயாணிதான். இருந்தாலும் கப்பல் உத்தியோகஸ்தர்கள் யாவரும் அவனிடம் தனி அன்பு செலுத்தினர். கப்பலைச் செலுத்துவது எப்படி, நடுக்கடலில் திக்கு திசையை எவ்வாறு அறிவது, இன்னும் எத்தனையோ நுட்பங்களை அவனுக்கு விளக்கிச் சொல் வார்கள். தம் சொந்த சுக துக்கங்களையும் நெருங்கிப் பழ கினவர்போலவே அவனிடம் சொல்லிக்கொள்வார்கள். கப்பலை இயக்கும் எஞ்சின்களைக் காணவேண்டுமென்று முகுலுக்கு அவா. நேற்றிரவு பதினோறு மணிக்கு அவனைக் கப்பல் அடியிலுள்ள பாதாளபுரிக்கு இட்டுச் சென்று, ஒருமணி காலம் எல்லாவற்றையும் விரிவாய்க் காட்டினர்.

காரியம் எவ்வளவு முக்கியமாக இருந்தாலும் எவரோடும் நெருங்கிப் பழகும் பெருந்தகைமை கீழ் நாட்டவர்களிடமே காணலாம். மேல் நாட்டவர் வேலையே பிரதானமெனக் கருதுபவர்; அதையே வழி படுபவர். மனிதத்தன்மைக்குச் சிறிதும் இடம் தராத கருமிகள். இதனால் காரிய சித்திதான். ஜப்பானியரும் இந்த மேல் நாட்டினரைப் பின்பற்றுகிறார்களோவென்று ஐயுற்றேன். ஆனால் கண்ணாலேயே இவர்களுடைய காரிய முறைகளைக் கவனித்த பிறகு, மனிதனுக்கும் காரியத் திற்கும் இடையே பெரும் பிளவு இருப்பதாகவே தெரிய வில்லை. கம்பெனியின் கப்பல் அல்ல இது, நம் சொந்த வீடென்ற நினைவே எனக்கு எழுந்தது. மனிதரோடு நெருங் கிப் பழகினாலும், கப்பலைச் சுத்தமாக வைத்துக்கொள்

வதிலும், வேலைகளைச் சரிவர நடத்துவதிலும் மேல்நாட்டாருக்கு இவர்கள் எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல.

ஜப்பானில், கீழ் நாட்டுப் பண்பு, மேல் நாட்டின் தொழில் நுட்பத்தைக் கற்றுத் தேர்ந்திருக்கிறது; தொழிலை நடத்தும் யஜமானர்களும் அவர்களே. இதனாலேயே ஒரு நம்பிக்கை உதயமாகிறது. கீழ்நாடு மேல் நாட்டுடன் சரி சமானமாக நிற்கமுடியும்; கிழக்கு மேற்கு என்ற வித்தியாசம் ஒழிந்து விடும். கல்வி பயிலும்போது, முதல் நிலையில் எதையும் அநுகரணம் (அப்படியே பின்பற்றுவது) செய்வதில் ஆர்வ மிகுதி தோன்றுகிறது. அப்போது ஆசான் மாணாக்கனுக்கிடையே உள்ளத் தொடர்பைவிட காரியமுறைகள்தாம் முக்கியமாக நிற்கும். ஆனால் உள்ளத்துள் ஓர் இயல்பு மெல்லத் தன் வேலையில் முன்னேறி வருகிறது. கல்வியின் கடினமான அம்சத்தைத் தம் சொந்த வழியில் இவர்கள் பதன் செய்து கொள்கிறார்கள். ஜீரணம் செய்துகொள்ளச் சில நாட்களாவது பிடிக்கும். ஆகவே மேல்நாட்டுப் பயிற்சியை எவ்வளவு தூரம் ஜப்பான் உட்கொண்டதென்பதை இந்த நிலையில் அளவிடற்கு எளிதன்று. மாறுதலில் எத்தனையோ விகாரங்கள் தென்படலாம். நம் நாட்டில் இல்லையா! ஆனால் முன்னேறும் வேலையில் முரண்பாடுகளைத் தாண்டித்தானே ஆக வேண்டும். ஜப்பான் இதில் தன் கவனத்தைச் செலுத்தி இருக்கிறது. இந்தக் கப்பலில் நான் பெற்ற அநுபவம் வரைக்கும், வெவ்வேறான இருநாட்டின் பண்புகள் ஒன்றாக இணைவதன் அடையாளத்தைக் காண்கிறேன்.



# 8. சிங்கப்பூர் அநுபவம்

ஆனி 2-ஆம் தேதி. கப்பல் சிங்கப்பூரை அடைந்தது. சில நாழிகைக்கெல்லாம் ஒரு ஜப்பானிய இளைஞர் என்னைச் சந்திக்க வந்தார். இந்த ஊரிலுள்ள ஒரு ஜப்பானியப் பத்திரிகையாசிரியர் அவர். ஜப்பான் தேசத்து பிரபல தினச்செய்தியின் ஆசிரியர், நான் ஜப்பானுக்குப் பயணமாவதைப்பற்றியும், வழியில் சிங்கப்பூரில் என்னை பேட்டி காணும்படியும் தமக்குத் தந்தி கொடுத்திருப்பதாகவும் அறிவித்தார். ஜப்பான் தேசமே இன்னும் நான் பார்க்கவில்லை, அதற்குள் ஜப்பானைப்பற்றி என் அபிப்பிராயத்தை எப்படிச் சொல்வதென்று கூறிவிட்டேன். என் இளம் நண்பர் பியர்ஸனும் பையன் முகுலும் சிங்கப்பூரைச் சுற்றிப்பார்க்க கப்பலிலிருந்து கிளம்பினர். கப்பல் துறையிலேயே கிடந்தது. இதைப்போன்ற ஓர் அவலட்சணமான இடம் உலகிலேயே இல்லை. இதற்கிடையே வானம் இருண்டு மழையும் பெய்யத் தொடங்கியது. கடகட ஜணஜண வென்று சரக்குகள் கிரேனில் ஏறுவதும் இறங்குவதுமான பேரிரைச்சல். நானோ வயதானவன். ஓர் இடத்தில் விழுந்துகிடக்க வேண்டியவன். ஊரைச் சுற்றிவர எனக்கு உடலில் திராணியோ உள்ளத்தில் தென்போ கிடையாது. இந்தச் சிங்கப்பூர் ஹார்பரின் கோலாகலத்தின் நடுவே கப்பல் டெக்கில் அமர்ந்தவண்ணம் என் மன அமைதிக்கு ஏதோ எழுதிக்கொண்டிருந்தேன்.

சற்றுப் பொறுத்து காப்டென் என்னிடம் வந்து ஒரு ஜப்பானிய மாது என்னைக் காண ஆவல்படுவதாகச் சொன்னார். நான் எழுதுவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து நோக்கினேன். மேல்நாட்டு உடையில் ஒரு ஜப்பானிய மடந்தை எனக்கு வணக்கம்செய்து, ஜப்பான் பத்திரிகையொன்றின் சார்பாக தான் வந்திருப்பதாயும், ஒரு சின்ன சொற்பொழிவு நான் ஆற்றவேண்டுமென்றும் தன் கோரிக்கையை வெளிப்படுத்தினாள். சிரமப்பட்டு அந்தப் பொறுப்பி

லிருந்து என்னை விடுவித்துக்கொண்டேன். 'என்னோடு ஊரைச் சுற்றிப் பார்க்கவாவது வருவீர்களா? நான் பத்திர மாகக் கொண்டுவந்து சேர்ப்பிக்கிறேன்' என்றாள். துறைமுக இரைச்சலைவிட்டு, கொஞ்சம் ஏங்கேயாவது வெளியே போனால் தேவலை யென்று பட்டது எனக்கும். அதிக பிகுபடுத்திக்கொள்ளாமல் அப் பெண்மணியுடன் மோட்டாரில் ஏறி, இருமருங்கிலும் மரங்கள் கவிந்த பல சாலைகளைக் கடந்து, குன்றுப் பாதைகளில் ஏறியும் இறங்கி யும் ஊரை ஒரு வலம் வந்தேன். படிப்படியாக இறங்கும் நிலங்கள். புல்வெளிகள் கறுத்த பசுமையாக இருந்தன. சாலை ஓரமாகவே ஓடைகளில் நீர் கலங்கிக் குபுகுபுவென்று வளைந்து வளைந்து ஓடிற்று. வெட்டிப்போட்ட பிரப்பம் கழிகள் அதில் ஊறிக்கொண்டிருந்தன. பாதையின் இரு பாரிசமும் அழகிய தோட்டங்கள், மாளிகைகள். வீதி வழி எங்கிலும் சீனர்களே பெரும்பாலும் தென்பட்டனர். இந்த நகரில் இவர்களிடமே எல்லா வியாபாரமும் தொழிலும் சிக்கியிருந்தன.

மோட்டார், நகரினுள் நுழைந்தது. என்னுடன் இருந்த ஜப்பானிய மடந்தை ஜப்பான் சாமான்கள் விற்கும் ஒரு கடைக்குள் என்னை இட்டுச்சென்றாள். அப்போது மாலை மங்கும் நேரம். கப்பலில் மாலை உணவுகொள்ளும் வேளை இதுவல்லவோ யென்று எண்ணிக்கொண்டேன். ஆனால் அந்தக் கூச்சலில் அவதிப்படுவதைவிட இதுவே மேலென எனக்குத் தோன்றியது. என்னை ஒரு சிறு அறையினுள் அமரச்செய்து தட்டு நிறையக் கனிவர்க்கங்களை வைத்துத் தின்னச் சொன்னாள். கனி புசித்த படலம் ஆனதும், பெரிய ஹோட்டலுக்கு என்னை அழைத்துச்சென்று போஜ னம் செய்விக்க என் உத்தரவை எதிர்பார்த்தாள். அதற்கும் நான் தடை கூறவில்லை. இரவு சுமார் பத்துமணிக்கு என்னைப் பத்திரமாகக் கப்பலில் கொண்டு விட்டதும் விடை பெற்றுச் சென்றாள்.

இந்தப் பெண்மணியின் வரலாறு விசேஷம் நிரம்பி



யது. இவளுடைய கணவன் ஜப்பானில் பெரிய நியாய வாதியாம். அந்த வேலையில் நிறைய வருமானம் இராது போகவே இந்தப் பெண்மணி, கணவருக்கு யோசனை கூறினாளாம், ஏதாவது வியாபாரம் செய்யலாமென்று. முதலில் விருப்பம் இல்லையாம் இவள் கணவருக்கு. 'நம் குலத்திலேயே இதுவரை யாரும் வியாபாரம் நடத்தியது இல்லையே. இது ஈனப் பிழைப்பன்றோ' என்று மறுத்தா ராம். கடைசியில் மனைவியின் பேச்சுக்கு இணங்கி ஜப்பானைவிட்டு, சிங்கப்பூரை அடைந்து கடையொன்று வைத்தார்களாம். பதினெட்டு ஆண்டுகள் ஆகின்றனவாம் இவர்கள் இவ்வூர் வந்து. நண்பர்கள் எல்லாம் 'ஆயிற்று இருக்கிற பணமும் போய் திண்டாடப்போகிறார்கள்' என்று நினைத்தார்களாம். இந்தப் பெண்மணியின் சலிப் பற்ற உழைப்பும், நேர்மையும், நாணயமும், அடக்கமும் கொஞ்சம் கொஞ்சமாக வியாபாரத்தை உன்னத நிலைக்குக் கொண்டுவந்தனவாம். சென்ற ஆண்டுதான் இவள் கண வர் இறந்துவிட்டாராம். இப்போது இவள் ஒரே ஆள் அந்தக் கடையை நிருவகித்து வருகிறாளாம்.

ஆனி 3-ஆம் தேதி காலையில் எங்கள் ஸ்டீமர் சிங்கப் பூரைவிட்டுக் கிளம்பியது. புறப்படும்போது ஒரு பூனை கடலில் விழுந்துவிட்டது. எல்லாக் காரியத்தையும் போட்டு விட்டு அந்தப் பூனையை உயிர் மீட்கும் பெரும் பணியில் ஜப்பானியர் அனைவரும் இறங்கினர். அதைக் காப்பாற்றிய பிறகுதான் கப்பல் நகர்ந்தது. தாமதமானாலும் ஒரு ஜீவன் உயிர் தப்பியது எனக்குச் சொல்லொணா மகிழ்ச்சியைத் தந்தது.

# 9. ஹாங்காங் வழியே

ஆனி ஒன்பது. மப்பு மந்தாரம், மழை இவற்றினால் ஆகாயம் மங்கியே கிடந்தது. ஹாங்காங் துறைமுகத்தின் அருகிலுள்ள குன்றுகள் கண்ணில் தெளிவாகப் புலப் பட்டன. குன்றுகளின் உடலிலிருந்து அருவிகள் நழுவி விழுந்தன. அரக்கர் சமுத்திரத்தில் முழுக்குப்போட்டு தம் ஈரத்தலையை வெளியே நீட்டுவது போலவும்; அவர்கள் சிகைகளிலிருந்தும், தாடிகளிலிருந்தும் நீர் வழிவது போலவும் மருளைத் தந்தது இக்காட்சி. ஸ்காட்லண்டில் தென்படும் மலைசூழ்ந்த பெரும் நீர் நிலையை இவ்விடம் நினைவுறுத்தும் என்று ஆண்ட்ரூஸ் சொல்லுவார். அந் நாட்டிலுள்ளபிரகாரமே தட்டைத் தட்டையான பச்சைக் குன்றங்கள். அங்கு வானில் தோன்றுவதை ஒத்து ஈரம் தோய்ந்த கம்பளமாக மேகங்கள் தென்பட்டன. படர்வ தும், மறைவதுமான பனிமூட்டம், வான் நீர் நிலமெங்கும். இரவு முழுவதும் வாடையும் மழையுமே. நேற்று படுக்கை என்னைச் சுமக்கவில்லை; நான்தான் படுக்கையைச் சுமந்து டெக்கில் மூலைக்குமூலை இடம் தேடி அலைந்தேன்.

நடு நிசி இருக்கும்; இனிமேல் இந்த மழையோடும் காற்றோடும் பகைமை கொண்டால் நடக்காதென்று, மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டேன். மழையின் சுருதி யோடு என் குரலைக் கூட்டி, வாடைக் காற்றுடன் நானும் பாட ஆரம்பித்துவிட்டேன்—'சீராவணேர் தாரார் மதோ படுக் ஜரே.' (பொழிவாய் இசையை மழையின் பெருங் குரல்போல்) இவ்வாறு எத்தனையோ மழைப் பாட்டுக்களை அன்று இரவு பாடித் தீர்த்துவிட்டேன். புதிய புதிய ஸ்வர மெட்டுகளைப் போட்டேன். ஆனால் மழைக்கும் மானிட



னுக்கும் நடந்த சங்கீதப் போட்டியில் தோல்வியுற்றவன் கவிஞனே. எனக்கு அவ்வளவு நேரம் பாட 'தம்' ஏது? என் கவிதைவிசை காற்றின் வேகத்திற்கெதிரே எம்மாத் திரம்?

நேற்று இரவே கப்பல், துறையை அடைந்திருக்க வேண்டும்; ஆனால் காற்று வலிவாக வீசவே கடல் ஓதம் பொங்கியது. கப்பல் துறைக்குள் நுழைவதற்கு வசதியாக இல்லை. மேலும் அந்த இடத்தில் கடலில் குற்றுப் பாறை கள் பதுங்கி இருந்தன. இரவெல்லாம், கப்பலைச் சரியான பாதையில் நிறுத்திக்கொண்டே இருந்தார் காப்டென். விடிகாலையும் மழை ஓய்ந்தபாடில்லை. சூரிய வெளிச்சமே இல்லை. வழி சரியாகப் புலப்படவில்லை. கடலில் கொந்த ளிப்பு. நடுநடுவே கப்பலில் மணி அடித்தார்கள். எஞ் ஜின், வேலை செய்வதும் நிற்பதுமாயிருந்தது. அன்று காலை போஜன விடுதியில் காப்டெனைக் காணவில்லை. நேற்றிரவே காப்டென் மழையுடை அணிந்துகொண்டு என்னிடம் வந்து, 'டெக்கில் படுக்கச் சௌகரியப்படாது; காற்றும் மழையும் வலுக்கும்போல் தோன்றுகிறது' என்று எச்சரிக்கை செய்தார்.

இதற்குள் ஒரு நிகழ்ச்சி எனக்கு அடங்காத சந்தோ ஷத்தைத் தந்தது. கயிறு கட்டிய ஒரு தோற்கூடையில் அடிக்கடிக் கடல் நீரை தூக்கிப் பார்த்தார்கள். இது எதற் கென்று அறிய முகுலுக்குப் பேராவல். உடனேயே அவன் கப்பலின் முன்தட்டிற்குச் சென்றான். அங்கேதான் கப்பலின் சுக்கானும், வழிகாட்டி யந்திரமும் இருந்தன. எந்த யாத்திரிகனையும் அங்கே வர விடமாட்டார்கள். இருந்தும் முகுல் கேட்ட கேள்விகளுக்குத் தகுந்த விடை தந்துகொண்டே இருந்தனர் அங்குள்ள அதிகாரிகள். கடலில் பல நீரோட்டங்கள் செல்கின்றனவாம். ஒவ்வொன் றும் வெம்மையில் வேறுபடுமாம். நடுநடுவே இவ்வாறு கடல் நீரைச் சேந்தி அதைச் சோதித்து, கப்பல் செல்லும் வழியைக் கண்டுபிடிப்பார்களாம். இத்தகைய நீரோட்

டத்தை விவரிக்கும் படத்தைக் காட்டி, கப்பல் ஓட்டத்திற்கும் அவற்றிற்கும் உள்ள சம்பந்தத்தைத் தெளிவாக முகுலுக்கு உரைத்தனர். புரியாத இடங்களில் பலகைமீது சாக்கட்டியால் கோடுகள் வரைந்து காட்டினர்.

சீமைக் கப்பல்களில் முகுல்போன்ற சிறுவர்கள் இப்படி எளிதாக நுட்பங்களைத் தெரிந்துகொள்ள வசதி செய்வார்களா? ‘யந்திரங்கள் இருக்கும் இடத்தில் நுழையக்கூடாது’ என்றுதான் அதட்டுவார்கள்.



# 10. உடல் மீட்டும் நாதம்

கப்பல் துறையை அடைந்ததோ இல்லையோ, ஜப்பானிலிருந்து எங்களை வரவேற்ற, தந்திகளும் கடிதங்களும் வந்து குவிந்தன. கப்பலின் பிரதானி என்னிடம் வந்து, ‘கப்பல் ஷாங்காயி போகாது, இந்த இடத்தை விட்டு நேரே ஜப்பான்தான்’ என்றார். ஏனென்று வினவியதற்கு, ‘ஜப்பானியர் உம்மைக் காணப் பரபரப்படைந்திருக்கின்றனர்; எங்கள் கம்பெனிக்குத் தந்தி வந்திருக்கிறது, தாமதமின்றி நேரே ஜப்பானுக்கே கப்பலைச் செலுத்தும்படி. ஆகவே ஷாங்காயில் இறக்கவேண்டிய சரக்குகளை ஹாங்காங்கிலேயே தள்ளிவிடுகிறோம்—வேறு கப்பல் அவற்றை எடுத்துச்செல்லும்’ என்றார்.

எனக்கு எவ்வளவு கௌரவம் பாரென்பதற்கு இதை நான் இங்கே குறிப்பிடவரவில்லை. இதில் ஆராயவேண்டிய விசேஷம் இருக்கிறது. காரியத்தைவிட மனிதத்தன்மையே பெரிதும் போற்றற்குரியது—இந்த உண்மையை உணர்ந்தவர் ஜப்பானியர்.

எங்கள் கப்பல் ஹாங்காங்கில் இரண்டொருநாட்கள் தங்கலாம். இறங்கி எங்கேயாவது ஹோட்டலில் தங்கி இருக்க எனக்கு இஷ்டமில்லை. அதைவிடக் கப்பலில் நிம்மதியான ஓய்வை அனுபவிக்கலாம், கறகறவென்று கிரேன்கள் ஓசை செய்தால்தான் என்ன?

கப்பலிலிருந்தபடியே ஒரு புதிய உலகத்தைக் கண்டேன். துறைமுகத்தில் சீன கூலியாட்கள் வேலை செய்தனர். நீல நிற நிஜார் அணிந்திருந்தனர். உடலின் மேல் பாகம் திறந்தபடியே இருந்தது. இந்தமாதிரி மேனி எழிலோ வேலையின் சந்தமோ இதுவரைக் கண்டதில்லை நான். உயிர் ததும்பும் வன்மையான தேகக்கட்டு; அநாவசியமான சதையே இல்லை இந்தச் சீனர்களின் உடலில். வேலையின் சந்தத்திற்கேற்ப இவர்கள் சரீரத்தின் தசைநார்கள் அலைபோல் விரிந்து அடங்கின. பருவான

சாமான்களை வெகு லாகவமாகவும், துரிதமாகவும் ஏந்தி எறியும் இவர்களது நுட்பத்திறமை மெச்சத்தக்கதே. தலையிலிருந்து கால்வரைக்கும், எந்த உறுப்பிலும், சோம்பரோ தயக்கமோ துளியேனும் தென்படவில்லை. இவர்களை அதட்டி வேலை வாங்கவேண்டிய தூண்டுதலே அவசியமில்லை. இந்தத் தேக வீணைகளிலிருந்து வேலை, தான இசைபோல் தானாகவே எழுந்தது. கப்பல் துறையில் சரக்குகளை ஏற்றுவதிலும் இறக்குவதிலும் இவ்வளவு வேடிக்கை இவ்வளவு இன்பமும் இருப்பதை இதுவரை உணரவில்லை நான். பூரண வலிமையோடு இயற்றும் தொழில் அழகியது. பொருளோடு உடல் மோத மோத அதன் கட்டுக்கோப்பு முருகு வாய்ந்தே விளங்கும். இத்தகைய உடல், ஆற்றும் பணியும் சிறப்பாக இருக்கும். தொழில் புனையும் ஒரு விசித்திர காவியமும், மனித உடல் மீட்டும் ஓர் இனிய நாதமும் என்னை பிரமிக்கச் செய்தன. இதோ தயக்கமின்றி கூறுவேன், பெண்பாலாரின் அழகிய மேனி, இவர்களது தேக காந்திக்கு எதிரே வெட்கிக் கண்ணைப் புதைத்துக்கொள்ளும். வன்மையும் வனப்பும் இப்படி ஒன்றி மெல்லியலாரிடம் தென்படுவது அரிதே. எங்கள் கப்பலுக்கு நேர் எதிரே மற்றொரு கலத்தில், மாலைப் பொழுது வேலை யெல்லாம் முடிந்ததும், சீன மாலுமிகள் டெக்கில் தம் உடைகளைக் களைந்து விட்டு நீராடினர். மனித சரீரம் இத்தகைய சொர்க்கப் பொலிவுடன் இருக்குமென்று நான் இதுவரை நினைக்கவில்லை.

எங்கள் கப்பலை அண்டினாற்போல் இடது புறம் சீனத் தோணிகளின் கூட்டம். மனைவி மக்களுடன் சீனப் படகோட்டிகள் அவற்றில் குடியிருந்து தம் அலுவல்களை நடத்தி வந்தனர். இவர்கள் புரியும் தொழிலின் சித்திரம் எல்லாவற்றையும்விட என் கண்ணுக்கு அழகாகத் தோன்றியது. தொழில், இதற்குமேல் உயர்வான உருவு கொள்ளாது, ஒரு நாள் இந்தத் தொழிலின் மேன்மையே நம் வாழ்வை வெற்றி முகமாய்த் திருப்பும். வாணிப



சீனத் தோணிகள்

அரக்கன், மனிதன் உருவாக்கும் இல்லறத்தையும், அவனுடைய சுதந்திரத்தையும் விழுங்கிவிட்டு, ஒரு பெரிய அடிமைக் கும்பலை உண்டாக்கி, ரத்தத்தை உறிஞ்சும் ஒருவகைச் சிறுபான்மையோர் இன்புற்றிருக்க வசதிகள் செய்துகொண்டே வந்தால், நம் மாநிலம் கூடிய விரைவில் நரகமாகிவிடும். இந்தப் படகுகளில் தம் குழந்தைக் குட்டிகளுடன் சீன தம்பதிகள் ஒற்றுமையாக வேலை செய்வதைப் பார்க்கும்பொழுது எனக்கு பெருமூச்சே வருகிறது. நம் பாரத நாட்டில் இப்படி ஒரு காட்சியை என்று காண்போமோ? அங்கே மனிதன் தன் அவகாசத்தில் முக்கால் வாசியை வீணுக்குகிருன். அநாவசியமான கட்டுத் திட்டங்கள், விதிமுறைகள், குலம் கௌரவம், இவற்றுள் சிக்கி நம் நாட்டினர் தமக்குள்ள வலிமையைப் போக்கி, பயனற்ற செயல்களில் கருத்தைச் செலுத்துகின்றனர். இதைப் போன்ற பெரும் புதிரும், உறக்கமும் ஆலசியமும் இந்த உலகத்தில் எங்கே தேடினுலும், அகப்படா. வகுப்புச் சண்டை, ஜாதிப்பூசல், சமயக்கூச்சல், பண்டை ஆசாரம், நிலையற்ற புதுமை மோகம்—இவைதாம் நம் நாட்டில் மலிந்திருக்கின்றன.

# 11. ஜப்பான் வாயில்–கோபே

ஆவணி பதினாறு. இன்று கப்பல் 'கோபே' துறை முகத்தை அடையும். சில நாளாக மழை நிற்காமல் பெய்கிறது. ஜப்பானைச் சேர்ந்த சிறு சிறு தீவுகள் ஆகாயத்தை நோக்கித் தம் சிறு குன்றுகளை உயர்த்திக் கடல் யாத்திரிகர்களை 'வா வா' என்று அழைக்கின்றன; ஆனால் மழையும் மூடு பனியும் அவற்றைக் கவனிக்க முடியாதபடி திரை போட்டு விடுகின்றன. பனிக்காலத்தில் ஜலதோஷம் கண்டு நம் குரல் கம்மலாக ஒலிப்பதுபோல், இத்தீவுகள் பனி மிகுதியில் மங்கலாகத் தம் உருவினைக் காட்டின. ஈரவாடையிலிருந்து தப்ப டெக்கின் ஒருகோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு என் சோபாவை நகர்த்திக்கொண்டே போனேன்.

கப்பலில் என்னுடன் ஒரு ஜப்பானிய யாத்திரி இருந்தார். அவர் வெகு நாட்களுக்குப் பிறகு தம் சொந்த ஊருக்குத் திரும்புபவர். பொழுது இன்னும் சரியாக விடியவில்லை; தம் காபினை விட்டு எழுந்து டெக்கில் வந்து நின்றார். எழுந்ததும் தம் அழகிய ஜப்பானின் முகத்தில் விழிக்க வேண்டுமென்ற எண்ணமோ என்னவோ! தொலைவில் தனியாக நீலமார் குன்று ஒன்று, மானசரோவரத்தின் நடுவே முளைத்த நீலோத்பல மொட்டுபோல் கடலிலிருந்து எட்டிப்பார்த்தது. கண் இமை கொட்டாமல் அதையே சிறிது நேரம் நோக்கியதும் தம் இடத்திற்குப் போய் விட்டார். அவருடைய கண்ணோக்கிலிருந்து அக் குன்றின் எழிலைப்பருகும் சக்தி எனக்கு இல்லை. என் கண், புதுமையை நாடுகிறது; அவருடைய புலன், என்றுமுள்ளதைப் பார்க்கிறது. எத்தனையோ அற்ப அனுபவங்களை ஒதுக்கிவிட்டு நாம் பார்க்கிறோம். இனியதும் இன்னாதும் மலிந்த ஓர் அகண்டாகார நாட்டின் குறுகிய



அங்கத்தையே அவர் கவனிக்கிறார். இதனாலேயே நமக்கு அற்பமெனத் தோன்றுவது அவருக்கு மேன்மையாகப் படுகிறது. விண்டதொரு பாகம், அவர் கண்ணுக்கு நிறைவாகத் திகழ்கிறது. பல ஒன்றாகவே காட்சித் தருகிறது. இத்தகைய கண்ணோக்கே உயரிய கலை நோக்காகும்.

ஸ்டீமர் துறையை அடைந்தபோது முகில்கள் விலகி உதய சூரியன் வெளிப்பட்டது. அப்ஸரமாதர்களைப்போல் பெரிய ஜப்பானியப் படகுகள் சீலை விரித்து, வருணன் மேவும் பெரும் புனல் உலகின் வாசிலிலேயே இரவியை வரவேற்க விரைந்து நடனம் புரிகின்றன. ஜப்பான் என் முன் மெல்ல மலர்வதைக் காணலுற்றேன். ஆனால் இந்தச் சுகானுபவம் வெகு நேரம் நீடிக்கவில்லை. என் பெயரைக்கொண்ட அவ்வானுறை ஜோதி மேகத்திலிருந்து விடுபட்டாலும் என்னைப் பிடித்த துன்பம் விலகினபாடாக இல்லை. பிலு பிலு வென்று பத்திரிகை ஒற்றர்கள் (நிருபர்கள்) நான் மறந்திருந்த சமயம் பார்த்து, தம் கேள்விகளாலும், காமிரா 'கிளிக்'கினாலும் என்னைத் துவளச் செய்தனர்.

கோபேயில் பாரத நாட்டு வணிகர்கள் எத்தனையோ பேர். அவர்களில் தெளித்தாற்போல் எங்கோ சில வங்காளிகள். ஹாங்காங்கிலேயே இவர்களுடைய அழைப்பு எனக்கு வந்தது. எனக்காக எவ்வளவோ ஏற்பாடுகள் செய்திருந்தனர்—தங்க வசதி உணவு யாவும். கப்பலடிக்கே வந்து என்னைச் சந்தித்தனர். ஜப்பானின் ஓவியர் நாயகமான டயிக்கன் வந்திருந்தார். இந்தியாவுக்குப் பயணம் வந்தபோது என் வீட்டில்தான் அவர் தங்கினார். காட்ஸ்டாகேவும் வரவேற்புக் குழுவுள் தென்பட்டார். அவரும் ஒரு பிரபல சித்திரக்காரர். அவருடன் ஸாநோவும் இருந்தார்—சாந்தி நிகேதனில் ஜூஜூத்ஸூ என்ற மற்பயிற்சி போதகராக இருந்தவர். இவர்களுக்கிடையே காவாகுசியும் தரிசனம் தந்தார். ஜப்பானில் நான் எதிர்பார்த்ததோ சொற்பம்; எனக்குக் கிடைத்த வரவேற்போ அமோகம். என்னைத் தம்

வீட்டிலேயே வைத்துக்கொள்வதைப் பற்றி ஜப்பான் நண்பர்களிடையே பெரும் போட்டி. அவர்களுக்கு வீண் சிரமம் கொடுக்காமல் இந்தியர் ஒருவர் வீட்டில் நான் தங்க ஏற்கனவே சம்மதம் தந்திருப்பதாகச் சொல்லியும் இருதரத் தாரும் என்னை இப்படியும் அப்படியும் இழுத்தனர். இதன் நடுவே பத்திரிகை பூதங்கள் என்னைச் சுற்றிச் சுற்றி அலைந்தன. ஊரிலிருந்து புறப்பட்டதும் வங்காள விரிகுடாவில் பெரிய 'ஸைக்ளோனில்' மாட்டிக்கொண்டேன். ஜப்பான் மண்ணில் கால் வைத்ததும் மனித 'ஸைக்ளோனில்' சிக்கித் திணறினேன். புகழ் என்பது பெரும் சங்கடத்தைத் தரும் விஷயம். எவ்வளவு நமக்குத் தேவையோ அவ்வளவு பெறுவதோடு நின்றுவிடுவதில்லை தொல்லைகள். எதுக்கும்வரை ஏற்றுக்கொண்டால்தான் உபசரிப்பவர்கள் திருப்தி அடைகிறார்கள். அதிக மழை, மழை இன்மை இவற்றுள் எது பயிர் விளைவுக்கு உகந்தது? இதற்கு விடை தருவது கடினந்தான்.

இங்கே வாணிபத்துறையில் செல்வாக்குடையவர் மோரார்ஜி. அவர் கூர்ஜரத்தவர். அவருடைய விருந்தாளியாகக் கடைசியில் அடைக்கலம் புகுந்தேன். இங்கேயும் பத்திரிகை ஒற்றர்கள் என்னை விடாமல் தொடர்ந்தனர். இந்தத் தொந்தரவை நான் எதிர்பார்க்கவே இல்லை. ஜப்பான் புது மது அருந்தி இருக்கிறது; இந்தப் பத்திரிகைப் பெருக்கே அதன் வாயிலிருந்து வரும் நுரை. அமெரிக்காவில்கூட இவ்வளவு இல்லை. பத்திரிகையில் வெளிப்படும் செய்திகள் பெரும்பான்மை வெறும் சொற் குமிழிகளே. உலகத்திற்கு இவை அவசியமே இல்லை. இதில் என்ன விநோதம் இருக்கிறதோ எனக்குத் தெரியவில்லை. வறட்டு வார்த்தைகளால் வெற்றிடத்தை நிரப்பும் வேலையே இது; வெறியை மூட்டும் சித்திரங்களை நாணமின்றி வரைகின்றனர் இவர்கள். இது எனக்குச் சகிக்கவில்லை.

மோரார்ஜி வீட்டில் உண்டு, உரையாடி, உபசாரங்கள் யாவும் முடிவதற்கு இரவு வெகு நேரமாயிற்று. அவர்கள்



ஜப்பானிய அழகி



அந்தப்புரத்துள் நடத்தும் ஸம்ஸார வாழ்க்கையில் என் கவனம் சென்றது. என் கண்ணில்பட்ட முக்கியமான காட்சி — ஜப்பானிய பணிப்பெண்தான். தலைமீது பொங்கி எழும் கூந்தற்குவை; கொழுவிச் சிவந்த தாடைகள்; சிறு அளவான கண்களில் குறுகுறுத்த விழிகள்; கூரிய மூக்கு— அவளுக்கு. அழகிய உடை. கால்களில் மரக்குறடு. நம் கவிதையில் வரும் உவமைகளுக்கு ஒருவிதத்திலும் ஒத்துப் போகாத அழகுவாய்ந்தவள். மனித வனப்புடன் பதுமையின் சாயல் சேர்ந்தால் எவ்வாறு இருக்கும்; கொழுவிய மாமிசத்தோடு உருகும் மெழுகைக் கூட்டினால் என்ன பொருள் ஆகும்? ஜப்பானிய அழகியைப் பார்த்தால் தெரியும். இவள் அங்க அசைவுகளில் சுறுசுறுப்பு; ஆற்றும் வேலையில் திறமை; நடத்தையில் திண்மை. வேலையில் எப்படிக் கெட்டிக்காரர்களோ, அப்படியே ஒழுக்கத்திலும் சுத்தமுடையவர்களென மோரார்ஜி இந்த ஜப்பானிய பணிப்பெண்களைப் பாராட்டிக் கூறுவார். என் வழக்கத்தை ஒட்டி நான் விடிநேரத்திலேயே எழுந்து விடுவேன். ஜன்னல் வழியே என் கண் அக்கம்பக்கத்து வீட்டில் நடக்கும் விஷயங்களைக் கவனிக்கும். பொழுது ஏற ஏற வீட்டு வேலை என்னும் அலையின் விட்டம் மெல்ல மெல்லப் பெரிதாகும். இந்த அலைக்குள் சுழல்பவர் பெண்பாலாரே. இத்தனை விசித்திரமாகப் பெண்கள் பல வேலைகளைச் செய்வதை நான் பார்த்ததே இல்லை. இவற்றைச் செய்வதில் அவர்கள் சிரமங்கொள்வதாகவே தெரியவில்லை; இயல்பிற்கு ஒத்திருந்தது. ஸம்ஸாரம் என்னும் கப்பலைச் செலுத்தும் உரிமை பெண்களுடையதே. இது அவர்கள் சுபாவ தர்மம். வீட்டினுள் கட்டுப்பட்டிருந்தாலும் இதைச் சீராக்கும் பணியின் மூலம் சுதந்திரம் பெறுகின்றனர். மிதமிஞ்சிய சௌகரியத்தினாலோ, சோம்பரினாலோ, விலாச கேளிக்கையினாலோ, உடலை அசைக்காத பெண்ணிடம் அழகு தங்காது; அவர்கள் நுகரும் இன்பம், நச்சு நிரம்பியதாக இருக்கும்.

ஜப்பானியர் வீடுகளில் பெண்கள் தம் காரியங்களைத் தம் கையினாலேயே செய்வதைப்பார்த்து நான் மெய்மறந்தேன். நடுநடுவே, அவர்கள் சிரிப்பொலியும், மழலை மொழிகளும் என் செவியை நிரப்பும். உலகில் எங்கும் மெல்லியலாரின் சிரிப்பும் குரலிசையும் ஒரேமாதிரியாகத்தான் தொனிக்கின்றன. நீரோட்டத்தின் சிற்றலைகள்மீது பளபளக்கும் ஒளிக் கதிர்கள் - வாழ்க்கையில் தென்படும் சஞ்சலத்தின் களியாட்டம் அவை !



# 12. ஜப்பானியப் பண்பும், கலையும்

புதுமையைக் காண்பதற்கு, மனம் தன் விளக்குகளைச் சற்று அதிகமாகத் தூண்ட நேரிடுகிறது. பழமையை நோக்க, கண்ணை நன்றாகத் திறந்திருக்கவேண்டிய அவசியமில்லை. புதுமையைக் காணும் ஆர்வத்தில், விரைவாகவே தன் வேலையை முடித்துக்கொண்டு மனம், தன்னுள் அதிகப்படி எரியும் விளக்குகளை அணைத்துவிடுகிறது. செலவைக் குறைத்துக் கொள்வதில்தான் அதன் அக்கறை எல்லாம்; மனோசக்திகளை ஒன்றாகத் திரட்டிக்கொள்வதில் அன்று.

'சொந்த ஊரில் இருக்கும்போது ஜப்பானைப்பற்றிப் புத்தகங்களில் படித்திருக்கிறோம் – படங்களில் அதைப் பார்த்திருக்கிறோம்—அப்போது நூதனமான நாடாகவே தோன்றியது—இப்போது நேரே காணுகையில் புதுமை ஏதுமே புலப்படவில்லையே ஏன் இது?' என்று என்னைக் கேட்டான் முகுல். காரணம் இதுவே—ரங்கூனே பிடித்து சிங்கப்பூர், ஹாங்காங் எல்லாம் தாண்டி வரவரப் புதுமையைக் காணும் ஆவல் குறைந்துகொண்டே அடியோடு மறைந்துவிடுகிறது. வேற்று நாட்டின் கடலில் மூலைக்கொன்றாக மொட்டைக் குன்றுகள் தலையைக் காட்டும்போது, 'என்ன அழகு என்ன அழகு' என்கிறோம். 'அந்த இடத்திலேயே இறங்கிவிட்டால் என்ன? தமாஷாக இருக்குமே' என்று முகுல் ஆசைப்பட்டான். 'புதுமையை முதன்முதல் காணும்போது எழும் உவகை நீடித்தே நிற்கும் போலும். அந்தக் குன்றுகளோடு கடல் என்றென்றும் சம்பாஷித்துக்கொண்டே இருக்கும்; அந்த இடத்திற்குப் போய்விட்டால் கடலின் கருநீலம் ஆகாயத்தின் வெளிர் நீலம், குன்றுகளின் மழுங்கிய நீலம் இவற்றைத் தவிர வேறு எதுவுமே வேண்டியிருக்காது நமக்கு' என்ற எண்ணம் முகுலுக்கு. எத்தனையோ விசித்திரக் குன்றுகளை எங்கள் கப்பல் கடந்து சென்றது. தூரதிருஷ்டிக் குழல் மேஜைமீதே

கிடந்தது. விசித்திரக் காட்சிகளைக் காண மனதிற்கு அலுப்பு தட்டியது. பார்க்கவேண்டிய வஸ்துக்கள் அதிகரித்தால், பார்ப்பதில் உள்ள பரபரப்பு அடங்கிவிடுகிறது. புதுமையைக் கண்ணால் பருகப்பருக, காணும் வேட்கை தணிந்துவிடும்.

ஜப்பானுக்கு வந்து ஒரு வாரந்தானாகிறது; ஆனால் வெகு நாட்களாயின மாதிரியே இருந்தது எனக்கு. வழிதுறை, மரம்மட்டு, மனிதர் மக்கள் யாவரும், நூதனமாக நம் கண்ணுக்குத் தோன்றினாலும், மனத்துள் ஆழமாகப் பதியவில்லை. பழமையே இந்தக் காட்சியில் அதிகமாகக் கலந்திருந்தது. பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத புதுமை எங்கேயுமே இல்லை. நமக்கு அறிமுகமிராதவை இவ்வுலகில் அதிகமாகவே இருக்காது. திடுமென நம் கண்ணில் ஒரு வஸ்து படும். நம் மனம் பழகியதோர் சூழ்நிலைக்கு அது ஒத்திருக்காது. அப்பால், நமக்குப் பழக்கமான பொருளோடு அதை ஒப்பிட்டுப் பார்ப்போம். வடிவிலோ வர்ணத்திலோ ஏறத்தாழ இருந்தால் இரண்டையும் பக்கத்தில் பக்கத்தில் வைத்துப் பழகுவோம். சீட்டு ஆடும்பொழுது நம் கையிலுள்ள சீட்டுக்களை ஜாதிவாரியாக, மதிப்புவாரியாக வரிசைப்படுத்தி வைத்துக்கொள்வது போலத்தான் இதுவும்.

ஜப்பான் நகரின் தோற்றத்தில், ஜப்பானியத் தன்மையே இல்லை. உடை, உணவு விஷயங்களிலும் ஜப்பான் தன் சொந்த வழக்கத்தை விட்டு விலகியே செல்கிறது. இன்று உலகெங்கும் ஒரே மோஸ்தரான ஆபீஸ் ஆட்சி பரவிவருகிறது. இந்த ஆபீஸ் ஆட்சி ஐரோப்பாவில் ஆரம்பித்தது; ஆகவே இதற்குரிய உடைகளும் தற்கால ஐரோப்பிய ரீதியிலேயே அமைந்திருக்கிறது. மனிதனை இன்ன தேசத்தவனென்று இந்த உடுப்பிலிருந்து கண்டுபிடிப்பது சற்றுக் கடினமே. 'ஹாட், கோட், பூட்' போடாதவன் எவன் இருக்கிறான்? இந்தப் புதிய பாணி பரவிக்கொண்டே சென்றால் உலகெங்கும்



கடைசியில் விகாரமே காட்சி அளிக்கும். அந்தந்த நாட்டின் பண்பிற்குரிய அழகு அடியோடு அழிந்துவிடும்.

சாதாரணமாக, ஜப்பான் வீதிகளில் பெண்களே அதிகமாகக் கண்ணில் படுகின்றனர். இவர்கள்தாம் உண்மையில் ஜப்பானியர் இல்லம், ஜப்பான் நாடு. இவர்கள், ஆபீஸ் ஆட்சிக்கு உட்படாதவர். இங்கே பெண்களை ஆடவர் கௌரவமாக நடத்துவதில்லை யென்று சிலர் சொல்லுகிறார்கள்; இது பொய்யோ மெய்யோ? இந்தப் பெண்மணிகளே ஜப்பானின் பண்பைக் காப்பாற்றக் கூடியவர்.

தெருக்களில் ஜனநெருக்கம் இருந்தாலும், அதிகச் சந்தடியே இல்லை. உரக்கப் பேச ஜப்பானியருக்குத் தெரியாதோ என்னவோ? ஜப்பான் சிறுவர்களுக்கு அழத் தெரியாதென்று இவர்கள் சொல்வது விந்தையாயிருக்கிறது. நானும் அழும் பிள்ளை ஒன்றையேனும் பார்க்கவில்லை. மோட்டார் வேகமாக வரும், குறுக்கே தள்ளு வண்டிக்காரன் செல்வான், அவன் வழி விடும்வரை மோட்டாரோட்டி பொறுமையுடன் காத்திருப்பான். திட்டமாட்டான், எரிந்து விழமாட்டான்.

ஜப்பானியர்களிடையே தென்படும் அபூர்வ ஆற்றலுக்கு மூலகாரணம், அவர்கள் உரத்துக் கூவியோ, ஒருவர் சிண்டை ஒருவர் பிடித்துக்கொண்டு சண்டை சச்சரவிட்டோ தம் சக்தியைப் போக்கிக்கொள்ளாததுதான். பிராணசக்திக்கு அநாவசியமான செலவிராததால் எத்தனையோ அரும் செயல்களை இயற்ற இவர்களுக்கு அவகாசம் ஏற்படுகிறது. இது இந்த ஜாதியாரின் தனிக்குணம் - இவர்கள் சாதனையின் முக்கிய அங்கம். துன்பம், அதிர்ச்சி, அட்டூழியம் ஏது நேரிட்டாலும், பொறுத்துக் கொண்டுபோக இவர்களுக்குத் தெரியும். அதனாலேயே வெளியாருக்கு இவர்களுடைய போக்கு புரிவதில்லை. 'ஜப்பானியர்களா, மர்மம் நிரம்பியவர்கள்' என்கிறார்கள். இதற்குக் காரணம், இவர்கள் தம்முள் பிளவு ஏற்படுத்திக்

கொண்டு, அதன் வழியாகத் தம் வலிமையை நழுவவிடுவ தில்லை என்பதே.

சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் ஆற்றல் இவர்க ளுக்கு அதிகம்—ஜப்பானியரின் கவிதைகள் இந்த அரிய பண்பை வெளியிடுகிறது. மூன்று வரியில் கவிதைகளை உலகில் வேறு எந்த நாட்டிலும் காணமுடியாது. அதுவே ஒரு சித்திரத்தை எழுப்பிவிடுகிறது. சொற்களைச் செட்டாக உபயோகிக்கின்றனர். அதனாலேயே இங்கே இசைக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது. பாடும் குரலை ஜப்பானியர் வீட்டிலாவது, தெருவிலாவது நான் கேட்கவே இல்லை. இவர்களுடைய இதயம் அருவியைப்போல் ஒலிக்காது. பொய்கை நீரைப்போன்று ஆழம் நிரம்பி அசைவற் றிருக்கும். இவர்கள் இயற்றும் கவிதை யாவும் ஓவியத் தைக் காட்டுவன தவிர இசைக்குரியன அல்ல. இவர்கள் உள்ளத்தின் மலர்ச்சி அழகு உணர்வின்மூலம் தென்படு கிறது. இவ்வழகுணர்வு தன்னலமற்றது. பூ, பறவை, அம்புலி இவைகளைவைத்து நாம் அபூர்வமான அணிகளை மிடைகிறோம் கவிதையில். கற்பனையிலும் இவர்கள், தம் மன அமைதிக்கு ஊறு இழைத்துக்கொள்ள மாட்டார்கள்.

எடுத்துக்காட்டாக ஜப்பானியரின் இரு பழங் கவிதை களைத் தருகிறேன். ஜப்பானியரின் பண்பை அவை ஒருவாறு உணர்த்தும் உங்களுக்கு :

பாழும் குளம்
பாயும் உணல்
ஆடும் புனல்.

அவ்வளவே! அதற்குமேல் என்ன வேண்டும்? அநாவசியச் சொல் அலங்காரம் எதற்கு—சித்திரம் மனக் கண்முன் எழுந்ததா இல்லையா? பாழும் குளம் ஒன்று, மனிதன் ஒதுக்கிவிட்டது; அங்கே நிச்சப்தம் நிலவுகிறது: நடமாட்டம் இல்லாததால். நீரில் அசைவில்லை; திடுமென தவளை ஒன்று குதிக்கிறது, நீர் அலப்புகிறது. கவி வெறும் கோடுகளை வரைகிறார்—நாமோ அழகுணர்வினால் அதற்கு



காமாகுரா புத்தர்

வர்ணம் தடவி, உயர்ந்த ஓவியமாக்குவோம். மூன்றே வரியில் ஜப்பானியக் கவியின் வேலை முடிந்துவிடுகிறது.

மற்றொன்று :

> **உலர்ந்த கிளை**
> **கூரல் காகம்**
> **கூதிர் வாடை.**

கூதிர்காலமானதால் சில்லென்று பனியின் வாடை வீசுகிறது. அந்தக்காலத்தில் மரக்கிளை வெறும் கொம்பாய் நிற்கும்; பூவேது இலையேது?

கூரல் காகம்; இறகுகள் நெறித்துக்கொள்ளக் காகம் அந்த உலர்ந்த கிளையில் அமர்ந்து வாடையின் துன்பத்தை அநுபவிக்கிறது. வெறிச்சென்ற சூழ்நிலைக்கு ஏற்ற மனோபாவம்; துன்பத்தின் அநுபவமே! மூன்றே வரியில் ஒரு பெரிய சித்திரத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது கவிதை.

இன்னுமொரு கவிதை; கண்முன் எழுப்பும் காட்சியைவிட இதில் கருத்தாழம் அதிகம் தென்படுகிறது.

'விண்ணகமும் மண்ணகமும், ஒரு மலர். தேவர்களும் புத்த பகவனும், மலரே—மனித உள்ளம், அம்மலருள் மணக்கும் அந்தராத்மா!'

இந்தக் கவிதையின் விசேஷக் கருத்து ஜப்பானை நம் நாட்டோடு இணைத்துவிடுகிறது. ஜப்பான், மண்ணையும் விண்ணையும் பூவின் அழகினில் காண்கிறது. பாரதநாடு சொல்வது என்ன?

'ஒரே காம்பில் இருமலர்கள் பூத்து விளங்குகின்றன—சொர்க்கம், மண்ணகம்—தேவர், புத்தபகவான். மனித இதயமென்று ஒரு பொருள் இராதுபோனால், இந்த மலர்கள் வெறும் புறப்பொருளாகவே இருக்கும். மனிதன் அகத்துள் தான் எல்லா அழகும் திகழ்கிறது. அங்கேதானே அன்பும் மணக்கிறது.'

நேற்று, ஜப்பானிய பெண்மணிகள் இருவர் வந்து எனக்கு இந்த நாட்டினர், பூக்களை அலங்காரமாகச் செய்

புக்குள்வைக்கும் கலையைக் காட்டினர். இவ்வாறு மலர்களை நிற வேறுபாட்டுடன் ஒழுங்குபடுத்துவதற்கு, என்ன நுட்பக் கலை உணர்வு வேண்டும்; எவ்வளவு கைத்திறமை இருக்கவேண்டும்; எத்தகைய சிந்தனைசக்தி குமிழ்க்க வேண்டும்?

ஒரு புத்தகத்தில் படித்திருக்கிறேன்; பழங்காலத்தில் கியாதிமிகுந்த போர்வீரர்கள், ஒழிவு நேரங்களில் பூத் தொடுக்கும் கலையின் நுட்பங்களை ஆராய்வார்களாம். இதனால் போரில் விறலும் வென்றியும் வருமென்பது அவர்களுடைய துணிபு. இதிலிருந்து தெரிவதென்ன; அழகுணர்வை வெறும் தமாஷ் என்று இவர்கள் நினைக்க வில்லை. இந்த அநுபூதி அமோக சக்தியை ஊட்டும் ஊற்றாகவே திகழ்கிறது. வாழ்வின் அடிப்படையில் அமைதி இருந்தால்தான் இந்தச் சக்திக்கு வீரியம் கிளம்பும். பதை பதைப்பும், சீற்றமும் மனிதனுடைய சிந்தனை ஓட்டத்தை யும், இதயப் பாங்கையும் கலக்கிவிடுகின்றன. அழகை நுகர்வதில் மனிதனுக்கு வெறுப்பு தோன்றுகிறது.

தனிகரான ஒரு ஜப்பானியர் வீட்டில் எனக்கு டீ வழங்கி உபசரித்தனர். ஒகாகுராவைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்; அவர் எழுதிய Book of Tea (தே விருந்து நூல்) என்ற புத்தகத்தில் இந்த டீ வழங்கும் அனுஷ்டானத்தின் வர்ணனை வருகிறது. இன்று ஜப்பா னியரின் வீட்டில் இதை நான் பார்த்தபின்பு, ஜப்பானியர் டீ பரிமாறுவதை தர்மானுஷ்டானமாகக் கொண்டாடுகின் றனர் என்று தெரிந்துகொண்டேன். இது இவர்களிடம் தென்படும் ஒரு தனிச் சாதனை.

கோபேயிலிருந்து நீண்டவழியே மோட்டாரில் சென்று, ஒரு பூங்காவினுள் நுழைந்தேன். நிழலும், கவினும், அமைதியும் பின்னிக்கிடக்கும் இடம். சோலை என்பது எப்படி இருக்கவேண்டும்; ஜப்பானியருக்குத்தான் தெரி யும் இதன் ரகசியம். வளைந்து செல்லும் செம்மண் பாதைகளை அமைப்பது, பல்வேறு கோணங்களான



பாத்திகளில் பூஞ்செடிகளை வைப்பது, இலையடர்ந்த மரங்களை விதவித வடிவங்களில் கத்தரித்துவிடுவது, இதை யெல்லாம் ஜப்பான் தோட்டங்களில் காணமுடியாது. அழகைக் காண, கண் இருக்கிறது, அழகைச் செய்ய, கை இருக்கிறது. இவர்கள், இயற்கையிடமே இந்தப் பாடத்தை கற்றனர் போலும்.

நிழல் கவிந்த வழியே நடந்துவந்தேன். ஓர் இடத்தில் மரத்தின் அடியில், குடைந்தெடுத்த பாறைத் தொட்டியில் பளிங்கு நீர் தேங்கி இருந்தது. அந்த நீரை எடுத்து முகத்தைக் கழுவிக்கொண்டோம். ஒரு சிறிய அறைக்குள் எங்களை அழைத்துச் சென்றனர். அகலமான பெஞ்சிமீது நெல்தாளில் பின்னிய வட்டமான பாய்களைப் போட்டனர். அவற்றின்மேல் அமர்ந்தோம். சற்றுநேரம் யாவரும் மௌனமாக இருக்கவேண்டுமென்பது இங்கே நியமமாம். போனோமா, சொந்தக்காரரைச் சந்தித்தோமா என்பது இங்கே இல்லை. முதலில் மனம் அமைதி கொள்ளவேண்டும். அதற்கே இந்த மௌனம். அப்பால் இரண்டு மூன்று அறைகளில் தங்கித் தங்கி அலுப்பாறியதும் சொந்தக்காரர் இருக்கும் விடுதியை அணுகுவோம். எங்கும் நிச்சப்தம். எந்த வேளையும் அங்கே மாலை மங்குலாகவே இருக்கும். ஒருவராவது பேசவில்லை. இந்த மோனம், மங்குல், ரகசியம், நம் மனத்துள் விசித்திரச் சிலிர்ப்பை எழுப்பின. வீட்டுக்காரர் மெல்ல மெல்ல எதிர்நோக்கி வருகிறார்; வணங்கி அதிதியை உள்ளே அழைத்துச் செல்கிறார்.

வீட்டினுள் சாமான்களே இல்லை யெனலாம். அறைகள் சூன்யமாக இருந்தாலும், என்னவோ ஓர் அழகு மட்டும் நிரம்பி விளங்கியது. சுவரில் ஒரு படம் தொங்கினால் அதிசயம். சாளரத்தில் ஏதாவது அழகிய பாத்திரம் இருக்கும், அவ்வளவே. வெறிச்சென்ற சூழ்நிலையில்தான் அழகுப் பொருள் கண்களுக்குத் தென்படும்; கூட்டத்தில் அல்ல. கலைப்பொருள்களை மூலைக்கு மூலைக்கு அடுக்கி வைப்பதில் அழகு சிறிதும் தென்படாது. இல்லாளைப்

பரத்தையர் நடுவில் வைப்பது போலத்தான்! முதலில் நம்முடைய ஆவலை, மூட்டிவிடுவதற்கு முற்சொன்ன முறைகளை அனுஷ்டிக்கின்றனர். நம் மனம் ஓர் அதிசயத்தைக் காணக் குவிகிறது. கடைசியில் வெறும் அறை நம்மை திடுக்குறச் செய்கிறது. ஊன்றிக் கவனிக்கிறோம் ஒரு பொருளை. அந்தப் பாழில் அபூர்வமான பூஞ்செப்போ பட்டுத் துகிலில் எழுதிய ஓவியமோ நம் எதிரே வந்து நிற்கும். மெய் மறந்து போகிறோம். இது ஒரு விஷயத்தை நினைப்பூட்டுகிறது: சாந்திநிகேதன் ஆசிரமத்தில் இருக்கையில் என்றைக்காவது எனக்குப் பாடும் உணர்ச்சி கிளம்பிவிடும். புதிய பாட்டுக்களை இயற்றிப் பாடுவேன். மரநிழலில் அமர்ந்து மற்றவர்களுக்கும் பாடிக் காட்டுவேன். செவிசாய்ப்போரின் இதய கவாடம் திறக்கும். ஆனந்தக் கடலாடுவார்கள், உளம் நெகிழ்ந்து நெக்குருவார்கள். இந்தப் பாட்டு, கல்கத்தாவில் நண்பர்கள் குழாத்தில் பாடும்போது வேறு பலனையே தரும். ரசிகர்கள் தலை ஆட்டுவார்கள்; ஆனால் சாந்திநிகேதனில் தோன்றிய உணர்ச்சி, கட்டிடம் நெருங்கிய, மனிதர் குழுமிய கல்கத்தாவில் எழாது. இந்தப் பாட்டிற்கேற்ற அம்பலத்தில்தான் இதன் சுவாரஸியம் வெளியாகும்.

அப்புறம் வீட்டு யஜமானர் என்னை தேவிருந்துக்கு உள்ளே இட்டுச் சென்றார். இந்த அனுஷ்டானத்தின் பொறுப்பைத் தம் அருமை மகளிடமே விட்டிருந்தார். அவ்வழகி, எதிரே வந்து வணங்கியதும், தேநீர் தயாரித்தாள். அவள் உள்ளே நுழைவதிலிருந்து, தேநீர் ஆக்குவது வரை ஒவ்வொரு காரியமும் அபூர்வ சந்தத்தோடு இயங்கின. பீங்கான் பாத்திரங்களைச் சுத்தம் செய்வது, அடுப்பு மூட்டுவது, பாத்திரத்தின் மூடியை விலக்குவது, கொதி நீரைக் கோப்பைகளில் சாய்ப்பது, சற்று நேரம் மூடி வைப்பது, தனிக் கிண்ணங்களில் தேநீரை ஊற்றி, அதிதிகளுக்கு வழங்குவது—இதைப்போன்ற ஒவ்வொரு சிறு வேலையிலும் அளவற்ற அழகு மண்டிக்கிடந்தது. தேநீரை



தேநீர் அனுஷ்டானம்

371

ஏந்தும் பீங்கான்கள் யாவும் மதிப்பிடமுடியாத சிறப்புச் சிறப்பு வாய்ந்தவை. அதிதிகள் செய்யும் கடமை என்ன? இவ்வழகிய பாத்திரங்களை உருட்டி உருட்டித் தேநீர் அருந்துவதோடு அவற்றின் அழகையும் உட்கொள்வதுந் தான். ஒவ்வொரு பாத்திரமும் தனி விசேஷம் நிரம்பியது, தனி வரலாறு உடையது. என்ன அருமையாக இந்தப் பொருள்களை இவர்கள் பாதுகாத்து வருகின்றனர்!

வேறு எந்த நாட்டிலும் ஆடவனுடைய கண்ணைக் கவர்ந்து, அவனை மோகத்துள் ஆழ்த்த, பெண்கள் தம் அங்க வளைவுகளை எடுத்துக் காட்டும் உடுப்பை அணிகின்றனர். ஜப்பான் அணங்குகள் ரொம்ப சாது, எவர் மனத்தையும் பறிக்காத சீலமுள்ளவர் என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால், ஆடவர் மயங்கிப் போகும் அளவிற்குத் தம்மை சிங்காரித்துக் கொள்வதில்லை இவர்கள்.

எனக்கு மகிழ்ச்சியை ஊட்டிய மற்றொரு விஷயம், ஜப்பான் சிறுவர்கள். இவ்வளவு குழந்தைகளை வேறு எங்குமே நான் கண்டதில்லை. ஜப்பானியருக்குப் பூ என்றால் பிராணன். இந்தக் காரணத்தினாலேயே பூவின் இயல்புடைய பைம் கண் துவர்வாய் சிறுவர்களிடம் இவர்களுக்கு அளவிலா அன்பு.

நாளை காலையே, மெயில் புறப்படுகிறது. நானும் டோகியோவுக்குக் கிளம்புவேன். ஒரு விஷயம் நீங்கள் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். நான் எப்படிப் பார்த்தேனோ, அந்தப்படியே எழுதி வருகிறேன். ஒரு புது நாட்டின்மீது மேல்வாரியாகவே கண்ணைச் செலுத்தித் திரட்டும் சங்கதிகள் இவை. ஜப்பானைப்பற்றி இன்னும் துருவி ஆராய்ந்து, விஷயங்களைத் தேடுவோருக்கு இந்தக் கடிதங்கள் ஏமாற்றமே அளிக்கும். இதை ஜப்பானின் முழு வர்ணனையாகக் கொள்ளமாட்டார்கள். என்னுடைய கடிதங்களில் ஜப்பானும் இருக்கிறது, நானும் சிறிதளவு இருக்கிறேன். நான் தொகுக்கும் விஷயங்கள் என் துணிபன்று, என் எண்ணந்தான்.

# 13. வாழ்வு—கூத்து—பாட்டு

பார்த்த காட்சிகளை அவ்வவ்வாறே வர்ணிப்பதென்னவோ முடியாத காரியம். முன்பே கூறியுள்ளேன், ஜப்பானியர் அதிகமாகப் படங்களைச் சுவரில் மாட்டுவதில்லை; அறைகளில் சாமான்களை அநாவசியமாக நிரப்ப மாட்டார்கள். கண்ணுக்கினிய வஸ்துக்களை அவர்கள் பெருவாரியாக வைத்து அழகு பார்ப்பதில்லை. ஒரு வஸ்து இருந்தாலும், அதை முழுவதும் உணர்ந்து அனுபவிப்பார்கள். அதனால் எதையும் நிறையக் கொள்ளவேண்டுமென்ற ஆற்றாமையே கிடையாது. ஜப்பானைக் கண்டு மகிழ்வதில் இவர்களுடைய கொள்கையைத்தான் நானும் பின்பற்றுகிறேன். காணவேண்டிய விஷயங்கள் ஒரே அடியாகக் கிடு கிடுவென்று வந்து குவிகின்றன. ஒவ்வொன்றையும் ஊன்றிக் கவனிக்க முடிகிறதா? சில தங்குகின்றன, சில நழுவி விடுகின்றன.

பத்திரிகை நபர்கள் என்னைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே இருக்கின்றனர். இவர்கள் செய்யும் உபத்திரவத்திற்கிடையே ஜப்பானின் உண்மை உருவைக் காண விழைவேன். ஆனால் என் ஆசை ஈடேறவில்லை. கப்பல் துறை, தெரு, வீடு, நான் எங்கிருந்தாலும் என் பின்னாலேயே திரிகின்றனர், இந்தப் பத்திரிகை வேவுக் குழு. இவர்களை யெல்லாம் கடந்து நான் கடைசியில் டோகியோ வந்து சேர்ந்தேன். இங்கு என் ஓவிய நண்பர் போகோயாமா டாயிக்கன் என்பார் இல்லத்தில் சரண் புகுந்தேன். அப்புறந்தான் எனக்கு ஜப்பானின் உள்ளத்தை நெருங்கிக் காணும் வாய்ப்பு கிடைத்தது.

முதலில் என் கால் ஜோடுகளை வீட்டு வாசலிலேயே விடவேண்டியதாயிற்று. ஜோடுகள் தெருவிற்குரியன; பாதங்கள் வீட்டிற்கு உகந்தவை. தூசு, பெயருக்குக்கூட இவர்கள் வீடுகளில் தென்படவில்லை. வீட்டு வெளியில் தான் அதன் ராஜ்யம். உட்புறம், இடைகழி கூடம் எங்கும்



தரையில் மெல்லிய தாழம்பாய்களைப் பரப்பி இருந்தனர்: அவற்றின் அடியில் வைத்தூறு அடைத்த உரப்பான சேக்கைகள். நடந்தால் ஓசையே படாது. கதவுகள் எல்லாம், காற்றில் ‘தடால் மடால்’ என்று சப்தம் செய்யாதவை. இவர்களது இல்லம், அதிக உறுப்புக்களைக் கொண்டிருக்கவில்லை. சுவர், கூரை, இறைவானம், சாலேகம், கதவு யாவும் கூடியவரை அளவு கடந்து செல்லவில்லை. அதாவது வீட்டின் கோப்பு, மனிதனை மீறி நிற்கவில்லை. அவனுடைய வசதிக்கு ஏற்றவாறு அமைந்திருந்தது. அறைக்குள் அறை, இந்தத் தொந்தரை யெல்லாம் இல்லை. தேய்த்து, அலம்பித் துடைப்பதற்குச் சௌகரியமாக இருந்தது.

இருக்க வேண்டிய அளவிற்குமேல் அறைகளில் சாமான்களை இவர்கள் குவிக்கவில்லை. மரச்சுவர், மரத் தரை யாவும் கண்ணாடிபோல் பளபளக்கும். இன்னும் பழைய ரீதியை அனுசரித்து வத்தனர். மேஜை கூர்ச்சி இவற்றை உபயோகிக்கவில்லை. மேஜையும் கூர்ச்சியும் உயிருள்ள பொருள்கள் அல்ல; ஆனால் காலும் கையும் உடையன. உபயோகிக்கும் ஆள் இராவிட்டால் இவை தம் கை கால்களைப் பரப்பி இடத்தை அடைத்துகொண்டிருக்கும்.

ஜப்பானியர் வீடுகளில், வருவோர் போவோர் அதிகந்தான். சிறு அறைகளானாலும் இவர்களால் அறையில் நெருக்கம் தென்படவில்லை. ஏனென்றால் எல்லாரும் தரையிலேயே பதிவாக உட்கார்ந்துகொள்ளுகிறார்கள். பாய் மூடாத பாகத்தில் தரை தக தக வென்று மின்னுகிறது. சுவரில் ஒரு படம் தொங்குகிறது. அதற்கு எதிரிலேயே ஒரு சின்ன பீடத்தில் செப்பினுள் அழகாக ஜோடித்து வைத்த மலர்கள். அங்கே இருக்கும் படம் வெறும் பகட்டுக்கன்று; எல்லோரும் பார்த்துக் களிப்பதற்குத்தான். அதை யாராவது நெருங்கித் தீண்டாமல் இருப்பதற்காகவே, பூஞ்செப்பைக் குறுக்கே நிறுத்தி இருந்தார்கள். வேறுநாடுகளில் புஷ்பங்களின் மதிப்பை உணராமல் அவற்றைச்

சென்டாகவும், சரமாகவும், கதம்பமாகவும் கட்டிவிடு கிறார்கள். விழாவுக்குச் செல்லும் நிறக்குழப்பமான மனி தக் கும்பலைப்போல் அவை தோன்றும். ஆனால் ஜப்பா னியர் பூக்களை அலங்காரமாக வைக்கத் தனிமையான இடத்தையே நாடுகின்றனர். மலர்களோடு இவர்கள் பழகும் விதம், நசுக்கிக் கசக்கி, பிய்த்துக் குழைப்பதுபோல் அன்று.

காலை நேரங்களில் ஜன்னல் வழியாக நான் கவனிப் பேன்; ஜப்பானியர் கலா நிபுணர்கள் மட்டுமல்ல, மனித வாழ்க்கையை ஓர் அற்புதக் கலையாகவே மாற்றி வருகின் றனர். மதிப்புள்ள பொருளுக்கு கௌரவம் உண்டென்பது இவர்கள் கொள்கை. ஆகவே அதற்கெனத் தம் இல்லங் களில் இடம் ஒழித்து விடுகின்றனர். பொருளின் சுமை, வாழ்க்கையின் மலர்ச்சிக்கு ஊறு செய்யும். இந்த வீடெங் கும் ஓர் இடத்திலாவது ஒரு மூலையிலாவது அனாவசிய சாமான் இருக்கவேண்டுமே! கர்ண கடூரமான ஓசை வர வேண்டுமே! நம் அவயவங்களை எவ்வளவு நீட்டிக்கொண் டாலும், ஒரு பொருள்மீதாவது நம் கையோ காலோ தாக் காது. ஓசை படுவதற்கு சாமான் ஏது? தாறுமாறாக, குப் பைக் கூளமாக, ஓசை ஆர்பாட்டமாக சூழ்நிலை இருந் தால் வாழ்க்கையில் ஆர்வமும், மனத்திண்மையும் நிமிஷத் திற்கு நிமிஷம் நமக்குக் குறைந்துபோம். நம்மைச் சுற்றி இலங்குவன, நம்மிடமிருந்து பிராணனின் ஓர் அம்சத்தைப் பெற்று, அதற்குப் பதிலாக அழகுள்ளதையும் உபயோக மானதையுமே தருகின்றன. அன்று காலை என் மனம் இன்பமிகுதியால் ததும்பிக்கொண்டிருந்தது. இதுவரை என் மனோ சக்தி நாலாவழியிலும் பாய்ந்து வீணாகி வந்தது, சல்லடையில் மொண்ட நீரைப்போல். ஆனால் ஜப்பானில் குடத்திலேயே விஷயங்களை மொண்டுகொண்டது என் மனம்.

ஜப்பானியர் கோபமே கொள்வதில்லை என்பது ஓர் அளவுக்குத்தான் உண்மை. ஒருமுகமான அபிப்பிராயம்,



இவர்கள் தங்களுக்குள் சண்டை சச்சரவு செய்வதில்லை என்பது. இவர்களுடைய வசைமொழியில் ‘அசடு’ என்று சொல் ஒன்றே வருகிறது. பெரிய மனத்தாங்கல் ஏற்பட்டு விடும்; ஆனால் பக்கத்தறையில் உள்ளவர்களுக்குக் கூடத் தெரியாதாம். இதுவே ஜப்பானியர்களின் ரீதி. பெரும் துயர் வந்துற்றபோதும், இவர்கள் வெடித்துவரும் கண்ணீ ரைக் கூட மறைத்துக்கொள்வார்களாம்.

‘பௌத்த மதம் எங்களுக்குத் தந்த பரிசு இதுவே. அடக்கம், கேண்மை இவையே எங்கள் சாதனை. எதிலும் மிதமாக இருப்பதால் அமிதமான பிராண சக்தியைப் பெறு கிறோம்; எந்த இன்னலையும் தாங்கிக்கொண்டு தலைதூக்கு கிறோம்’ என்கிறார்கள் இவர்கள்.

இதைக் கேட்கும்போது எனக்குத் தலை இறக்கமாய் இருக்கிறது. பௌத்த தர்மம், நம் நாட்டில் தோன்றியது. ஆனால் நம் வாழ்வினை இவ்வளவு அழகாகவும், அடக்க மாகவும் நாம் திருத்திக்கொள்ள முடியவில்லையே.

ஜப்பானியக் கூத்தைக் காண ஒரு நாள் தியேட்ட ருக்குச் சென்றிருந்தேன். இவர்களது நாட்டியம் உடல் பாணி எழுப்பும் இசை. திவவுமீது ஸ்வரங்கள் நர்த்தனம் புரியும் வீணாவாதனம் போன்றது. விரல் பாணிகளும், அங்க அசைவுகளும் இடைவெளியிராமல் ஒன்றி இருந்தன. பூத்துக் குலுங்கும் கொடி போன்று உடல், அழகைச் சொரிந்தது. அசல் ஐரோப்பிய நிருத்தியம் அர்த்தநாரி வடிவம் கொண்டது. பாதி தேகப்பயிற்சி, பாதி நடனம். பாய்ச்சலும், துள்ளலும், தட்டாமாலைச் சுழலலுமே அதிகம். ஜப்பானிய நட்டம் நிறைவானது. நாட்டியாலங்காரத்தில் விரசமாக தேகத்தை அம்பல மாக்கும் சூழ்ச்சிகளே இல்லை. வேறு நாடுகளில் நடன பாணியில் அந்த மிருந்தாலும், காமவேட்கையை மூட்டும் அவலக்ஷணமும் இருக்கிறது. ஜப்பானில் இது துளி யேனும் இல்லை. அழகை உபாசிக்கும் இவர்கள் தெளிவை விட்டுக் கலப்பை விரும்பவில்லை தம் கலைகளில்.

இவர்களுடைய சங்கீதம் அவ்வளவாக முன்னேற வில்லை. கண்ணுக்கினியதும் காதுக்கினியதும் ஒன்றாக அமைவது மிக அரிது. கற்பனையின் ஓட்டம் ஒரு புலன் வழியாக உயர்வை நோக்கிச் சென்றால், மற்றொரு புலன் வழியே செல்லும் வேகம் அதற்குக் குறைந்துவிடுகிறது. எல்லையற்றது எல்லைக்குள் அடங்கும்போது ஓவியம் தோன்றுகிறது. எல்லையற்றது, எங்கே எல்லையின் நினைவையே மறந்துவிடுகிறதோ அங்கே இசை பிறக்கிறது. உருவ உலகின் கலையே சித்திரம். அருவ உலகின் கலையே பாட்டு. கவிதை, இவ்விரண்டிலும் தொடர்பு உடையது. சித்திரமாகவும் தோன்றும், பாட்டாகவும் பறக்கும். ஏனென்றால் கவிதையின் கருவி, சொற்கள். சொல் ஒரு புறம், பொருளைத் தழுவுகிறது, வேறுபுறம் ஸ்வரத்தைப் பற்றுகிறது. பொருளைக் கொள்ளும்போது சித்திரம் கண் முன் வருகிறது. ஸ்வரத்தைக் கொள்ளும்போது இன்னிசையாக செவிக்கு விருந்தாகிறது.

ஐரோப்பாவிற்குச் சென்றிருந்தபோது, மேல் நாட்டினரின் தொழிற்சாலை, வேலை மும்முரம், அளவற்ற செல்வம், கட்டுக்கடங்காத வீரியம் இவையே கண்ணை அதிகமாக உறுத்தின. ஆனால் ஜப்பான் இப்போது பூண்டிருக்கும் மேல்நாட்டு வேஷத்தைக் களைந்து பார்த்தால், மனிதன் இங்கே இன்னும் இருக்கிறான், மெஷினாகிவிடவில்லை. இதயம் அடித்துக்கொண்டிருக்கிறது என திடமாக நம்பலாம். இவர்கள் பூண்டிருக்கும் மாறுவேடம், அகம்பாவம் அன்று; ஆடம்பரமும் அன்று. அது ஒருவித உபாசனையே. வீரியம் தன்னைப் பற்றியே பறை அறைந்துகொள்ளும். இதற்காக தன்னால் முடிந்தவரை பொருள்களைப் பெருக்கிக் கொள்ளும். எல்லாரையும் தனக்குத் தலை வணங்கும்படி செய்யும். ஆனால் உபாசனையோ தன்னைவிட மேலான தொன்றையே பிரசாரம் செய்யும். இதற்காக எதையும் அழகாகவும் சீராகவும் ஆக்கிக் கொள்ளும். ஒவ்வொரு சிறு விஷயத்திலும், நடவடிக்கையிலும் இவர்களுக்கு



க்யோடோ வாசிப்பு

உபாசனையிலுள்ள ஆனந்தம் வெளிப்பட்டது. இந்த ஆனந்தம், உண்டு ஏப்பம் விடும் ஆனந்தமே அன்று. பூஜையில் லயித்த ஆனந்தம். அழகிய பொருள்களோடு இவர்கள் பழகும்போது, மென்மையாகவும், தூய்மையாகவும் நடந்து கொள்கின்றனர். மனத்திற்குப் பிடித்த ஒன்றின் எதிரே உரக்கப் பேசக்கூடத் தயங்குகின்றனர். இந்த வழிபாட்டில் அழுக்காறுக்கு இடமே இல்லை. காரணம், இந்த அழகு உபாசனை உயர்வான வஸ்துவைத்தான் வெளிப்படுத்தப் பார்க்கிறது. தில்லியில் புராதனமான ஹிந்து சாம்ராஜ்யம், தன் கீர்த்திக்கு அறிகுறியாக மண்டபம் எழுப்பிய இடத்தில் குதுப்-மினார் அகம்பாவத்துடன் உலக்கை போல் நெட்டிக்கொண்டு நிற்கிறது. இந்த ஹடம் நமக்கு வெறுப்பைத் தருகிறது. காசிக்குப் போங்கள்; அங்கே ஹிந்துக்களின் புனித ஆலயத்தை நையாண்டி செய்வதுபோல் அவுரங்கஜேபின் மசூதி முறைக்கிறது. இதில் அழகோ, மேன்மையோ தோன்றுகிறதா? ஆனால் ஆக்ராவில் தாஜ் மஹால் முன்னால் நின்று பாருங்கள். விவாதமே நம் மனத்துள் எழாது, புகழுக்குரியவன் முஸல்மானா, ஹிந்துவா என்று. இது மனிதனுடைய கீர்த்தி என்றுதான் நம் இதயம் முடிவு கட்டுகிறது.

சைனாவுடன் தொடுத்த கப்பல் சண்டையில் ஜப்பான் வெற்றி பெற்றது. அந்த வெற்றியின் சின்னமாக தம் நாடெங்கும் இவர்கள் முட்களைப்போல் தூண்களை நிறுத்துவது கொடுமையாகும்; இவர்கள் அழகுணர்வுக்கே ஓர் இழுக்காகும். இதை ஜப்பான் உணர்வது உசிதம். பிரயோஜன நிமித்தம் மனிதன் எத்தனையோ குரூரச் செயல்களை நடத்தவேண்டி இருக்கிறது. இவ்வாறு ஆடம்பரமாகக் குறிகள் எழுப்பிக் கொடுமையின் விளைவைப் போற்றுவதைவிட, அவற்றை மறந்து விடுவதன்றோ வெற்றிக்கு அழகு. கோயில் என்ன செய்தது, மடம் என்ன பண்ணிற்று கலைக்கூடம் என்ன தீங்கை இழைத்தது? இவை மனிதனின் கொடிய செயல்கள் அல்லவே!'

# 14. நிகரற்ற ஓவியங்கள்

டோகியோவில் நான் ஒரு சிற்பியின் வீட்டில் தங்கி இருந்தேன். டயிக்கனின் பெயரை முன்பே கேள்விப்பட்டிருப்பீர்கள். குழந்தை போன்ற சுபாவமுடையவர். எப்போதும் சிரிப்பு, முகத்தில். எவரையும் சந்தோஷப்படுத்தும் திறமை அவருக்கு உண்டு. தாராள மனசு, பழகுவதற்கு எளிமையும் இனிமையும் வாய்ந்த தன்மையாளர். அவர் வீட்டிலிருக்கும்வரை அவர் சிறந்த ஓவியரென்ற விஷயமே எனக்குத் தெரியாது.

யோகோஹோமாவில் ஒரு தனிகர் வீட்டில் என்னை அழைத்திருந்தார்கள். சென்றேன். அவருடைய வீட்டைச் சுற்றிலும் மரப் பொதும்பர். சொர்க்கத்திலிருக்குமென்பார்களே, அந்த நந்தவனமோ இது என ஐயுற்றேன். அவருடைய பெயர் 'ஹாரா'. ஜப்பானிலேயே டயிக்கனும், தான்ஜான் சிமோமுராவுமே இன்றைய யுகத்துத் தலைசிறந்த ஓவியர்களெனச் சொல்லக் கேட்டேன். ஐரோப்பிய ரீதியை இவர்கள் பின்பற்றவில்லையாம்; பழமையான ஜப்பானிய பத்ததியையும் இவர்கள் அடியொற்றிச் செல்லவில்லையாம். முற்றிலும் புதிய முறையிலேயே வரைகிறார்களாம். ஜப்பானிய ஓவியக்கலையை, இவ்விரண்டு ரீதியிலிருந்து மீட்டு, தனி மார்க்கத்தைக் கோலினவர்களெனத் தெரிந்தது. ஹாரா வீட்டில்தான் டயிக்கனின் ஓவியத்தை முதன் முதல் கண்டேன். களிப்பெய்தினேன். அதில் எதுவும் மிகையாக இல்லை. வேகமும் இருந்தது, தணிவும் இருந்தது. படத்தின் விஷயம்: சீனாவின் பழங்கால பாவாணர் ஒருவர், பாவத்தில் திளைத்து வழி நடந்து செல்கிறார். அவர் பின்னால் ஒரு பையன் யாழை பயபக்தியுடன் ஏந்திச் செல்கிறான். அந்த இசைக்கருவியில் நரம்பே இல்லை. அவனுக்குப் பின்புறமாக தாழ்ந்திருக்கும் ஒரு மரக் கிளை. ஜப்பானில், மூன்று மடிப்பாக உள்ள படுதாவிலேயே சித்தி



ரங்களை வரைவார்கள். இதுவும் அந்தப் பட்டுச் சீலையின் மீதுதான் குயிற்றியது. பெரிய அளவில் இருந்தது படம். ஓவியத்தின் ரேகைகள் ஒவ்வொன்றிலும், ஜீவன் ததும்பியது. அதில் வர்ண விசித்திரம் மருந்திற்குக்கூட அகப்படாது. சலாகையை இசைவாகவும், உறுதியாகவும், பூரிப்பாகவும் கையாண்டிருக்கிறார். பார்த்த மாத்திரம் அபாரமானது, உண்மைக்கு ஒத்ததென எவரும் பாராட்டுவர்.

அப்புறம் அவர் வரைந்த மற்றொரு படத்தைப் பார்த்தேன். படுதாவின் தலைப்பக்கம் நிறைமதி. நடுவே பாய் விரித்த படகு. கீழே இரண்டு தேவதாரு மரத்தின் மொட்டுக் கிளை; வேறு எதுவுமே இல்லை. நீரைக் குறிப்பிட ஒரு சிறு அலையின் கீற்றோ தொடுவானைக் காட்ட ஒரு வர்ணக் கோடோ இல்லை. நிலவில் மயங்கி விரியும் ஒரு வெண்மைதான் ஆகாயம். படகு இருப்பதால் நீரின் நினைவு வருகிறது. இப்படி நீரையும் வானையும் நிலவில் தோய்க்கும் மாயாஜாலத்தைக் கண்டு பிரமித்துப் போனேன். நிலா என்றால் நிழல் இருக்கவேண்டுமே; அந்த மரக்கிளையில்தான் சற்றுக் கறுமையின் சாயலைக் காண்பித்திருந்தார், அந்த ஓவிய சிகாமணி. ஹாரா வேறொரு குறுகிய அறைக்குள் என்னை இட்டுச் சென்றார். சுவரையே அடைத்துக்கொண்டு ஒரு பெரிய படம் நின்றது. சிமோமுராவின் கைவினை. குளிருக்குப் பின் வஸந்தம் தோன்றுகிறது. ப்ளம் மரத்தின் கிளையில் இலையே இல்லை. வெறும் வெண்ணிற மலர்கள் மலிந்திருந்தன. பூவின் இதழ்கள் கீழே உதிர்கின்றன. அந்த நிலைக்களனில், வான் விளிம்பில் முளைக்கும் செஞ்ஞாயிறு. அதற்கு எதிர்ப்புறம் 'ப்ளம்' மரத்தின் இலைவறண்ட கிளையின் மறைவில், ஒரு குருடன் கைகுவித்துக் கதிரவனை வழிபடுகிறான். ஒரு குருடன், ஒரு மரம், ஒரு சூரியன், பொன்னார் மேனியான ஓர் ஆகாயம்; இவ்வளவே. ஆனால் என்ன ஐக்கியம் ஒன்றுக்கொன்று! உயர்ந்த ஓவிய வரிசையில் வைக்கவேண்டிய

படம் இது. உபநிடதத்தில் வரும் பிரார்த்தனை மந்திரம், இந்தப் படத்தில் உருவமும் நிறமும் கொண்டு விளங்குகிறது. தமஸோ மா ஜ்யோதிர் கமய—இது குருடனுடைய பிரார்த்தனை மட்டு மன்று, குருட்டு இயற்கையின் உள்ளத்தின் குரலுந்தான்—தமஸோ மா ஜ்யோதிர் கமய—அந்த ப்ளம் மரத்தின் வற்றிய கிளைகூட ஒளியை நோக்கித் தாவுகிறது. எங்கும் ஒளி, எத்திசையும் ஒளி. இதன் இடையே அந்தகனுடைய பிரார்த்தனைக் குரல் கேட்கிறது—'ஒளி தா ஒளி தா' என்று.

சிமோமுராவின் மற்றொரு படம் பார்த்தேன். படத்தின் அளவு சிறிதே. ஆனால் படத்தின் விஷயமோ விசித்திரமானது. ஒரு சாதகன் தன் ஏகாந்த அறையினுள் தியானத்தில் ஆழ்ந்திருக்கிறான். பகைவர் அறுவர் அவனை நான்கு புறத்திலிருந்தும் தாக்குகின்றனர். பாதி மனிதன் பாதி விலங்கு போன்ற பயங்கர உருவங்களைக்கொண்டிருந்தனர். கோரமான முகங்கள். அவர்களுள் சிலர் நேரிடையாகத் தம் ஆயுதங்களை ஓங்குகின்றனர்—சிலர் மறைவில் பதுங்கி, கொல்லப் பார்க்கின்றனர். ஆனால் இவர்களெல்லாம் அவன் வீட்டுக்கு வெளியில் நின்று தம் வேலையைச் செய்கின்றனர். அதே அறையில் இந்தச் சாதகனுக்கு எதிரிலேயே இவர்களை எல்லாம் விட, பெரிய பகையாளி உட்கார்ந்திருக்கிறான். அவன் புத்தபிரானைப் போலவே இருந்தான். ஆனால் அவன் முகபாவனையை ஊன்றிக் கவனித்தால்—போலிப் புத்தனென்று தெரிந்துகொள்ளலாம். பருத்த தேகம்—முகத்தில் ஒரு கள்ளச் சிரிப்பு. மாயை, புனித உருவம் கொண்டு இந்தச் சாதகனை ஏமாற்றுகிறது. இந்தப் போலிப் புத்தனே அத்யாத்மிக அஹங்காரம். சீலம் கம்பீரம் இவற்றின் வடிவமும், முக்தியின் பிழம்புமான புத்த பகவானின் வேஷத்தைப் பூண்டிருக்கிறது. இதை அறிவது கடினந்தான். இது சாதகனுடைய உள்ளத்திலேயே உலவும் கொடிய விரோதி. பெரிய தத்துவ உண்மையை விளக்குகிறது இச்சித்திரம். தேவதையின் பெயர் வைத்து



மனிதன் தன் பிரவிருத்தி அதாவது தன் நீச விருப்பத்தையே கும்பிடுகிறான்.

என்னை அதிதியாக ஏற்ற ஹாராஸான், மேதாவி உயர்ந்த ரசிகர். கடல் ஓரமாகவே ஒரு மலையின் சரிவில், மிக அழகிய பூங்காவை வைத்து பொதுமக்கள் அனுபவிக்க விட்டிருக்கிறார். அதில் களைப்பாறுவதற்கு வசதியாக எத்தனையோ இடங்கள்—யார் எங்கே வேண்டுமானாலும் தேநீர் அருந்தலாம். வனபோஜனங்கள் நடத்தத் தனி இடங்களும் உண்டு. கஞ்சத்தனமோ, ஆடம்பரமோ இராத மனிதர் ஹாரா. ஆனாலும் ஐசுவரியத்தில் மிதந்தார். பணம் குவிப்பதே குறிக்கோளாக உடையவர்களுக்கு அருமையான பொருள்களை வைத்துப் பாதுகாக்கத் தெரியாது. கலை பொருட்குரிய அருமையை இவரைவிட வேறு யார் உணர்வர்!

# 15. ஜப்பானியரின் சாதனை—வெற்றி—சமயம்

ஐரோப்பா, எந்த பலத்தைக்கொண்டு உலகையே ஆட்டி வைக்கிறதோ, அதன் மர்மத்தை தெரிந்துகொண்டால்தான் மேல் நாட்டின் ஆதிக்கியத்திலிருந்து மீண்டு தலை தூக்கமுடியும். இன்றேல் அந்தப் பயங்கரச் சக்கரத்தின் கீழ் நசுங்கி மரிக்கவேண்டியதே. இந்த உண்மையை ஆசிய நாடுகளுள் ஜப்பான்தான் திடுமென ஒரு நாள் உணர்ந்தது.

இந்த எண்ணம் அதற்கு வந்ததோ இல்லையோ, ஒரு நிமிஷங்கூடத் தாமதிக்கவில்லை. சில ஆண்டுகளுக்குள் ஐரோப்பியர்களின் சக்தி மந்திரத்தை கற்றுத் தேர்ந்தது. இக்காலத்து போர் முறைகள், தொழில் நுட்பங்கள், ரீதி நீதிகள், ஆபீஸ், ஆட்சித் திறமை, சட்ட திட்டங்கள், யாவும் அலாதீனின் மாயவிளக்கிலிருந்து வருவனபோல் மேல் நாட்டிலிருந்து அப்படியே வாரிச் சுருட்டிக்கொண்டு வந்தனர். கிழட்டு மரங்களை ஓரிடத்திலிருந்து பெயர்த்து வேரிடத்தில் நட்டு வளர்க்கும் வித்தையில் கைதேர்ந்தவர்கள், இந்த ஜப்பானியர். அதைப்போலவே ஐரோப்பியரின் கல்வியை, வேர், அடிமரம் கிளை, ஒன்று பாக்கி விடாமல் தம் நாட்டில் பதித்தனர். இலை வாடி உதிர்ந்தாலும் விரைவிலேயே இந்த மரம் காய்க்கத் தொடங்கியது தான் அதிசயம். முதலில் ஐரோப்பாவிலிருந்து ஆசிரியர்களை அதிகச் செலவில் வரவழைத்தனர். கற்கவேண்டிய யாவும் கற்றுணர்ந்ததும் இவர்களை அனுப்பிவிட்டு முன்னேற்றக் கப்பலின் சுக்கானையும், தள்ளு கழியையும் தாமே இயக்கத் தலைப்பட்டனர்—பாய்மரத்தை மட்டும் மேல் திசைக் காற்று வாக்கில் திருப்பினர்.

இதைப் போன்றதோர் ஆச்சரிய நிகழ்ச்சி என்றுமே இவ்வுலகில் காணவில்லை.



ஷிந்தோ ஆலயம்

உலகிலேயே இரு தினுசான ஜாதி மனப்பான்மை உண்டு. ஒன்று தாவர (அசையா) இனம்; மற்றொன்று ஜங்கம (அசையும்) இனம். இந்தத் தாவர ஜங்கம மனப்பான்மைகளுக்கிடையே ஒரு பெரிய பேதம் இருப்பதை உங்களுக்கு சொல்ல வரவில்லை நான். சில சமயம் தாவரப் பொருள்களும் விதி வசத்தால் இடத்தை விட்டு நகரவேண்டியிருக்கின்றன. ஜங்கமம் நிலைத்து நிற்கவேண்டிய காலமும் வருகிறது. ஆனால் அசையாப் பொருளின் தாளலயம் விளம்ப கதி; ஜங்கமத்தின் தாளம் துரித கதி.

ஜப்பானின் மனம் இயல்பாகவே ஜங்கம வகையைச் சேர்ந்தது. இதனாலேயே ஒரு தாண்டில், இரண்டு நூற்றுண்டுகளைச் சில வருஷங்களிலேயே கிடு கிடு வென்று கடந்து முன்னேறியது. துர்பாக்கியம் பிடித்த நம் நாடோ ஆயிரம் ஆயிரம் வருஷங்களாக வழியோரத்து ஆலமர நிழலில் படுத்து உறங்கி, காலத்தைக் கழிக்கின்றது. ‘இந்த ஜப்பானியர் என்ன, ஹல்கா பேர்வழிகள்; நம்மைப்போல் ஆழ்ந்த குணமிருந்தால் இப்படி விகாரமாக குதித்து ஓடுவார்களா? சத்தான பொருள் இப்படிச் சீக்கிரமாக உருவாகுமா எங்கேயாவது?’ என்று நம்மில் சிலர் வேதாந்தம் பேசினுர்கள்.

நம் கண்ணாலேயே பார்த்தாகிவிட்டது, ஆசியாவின் ஒரு மூலையில் கிடந்த இந்த குட்டித் தீவினர் ஐரோப்பியரின் தொழில் நுட்பங்களில் தேர்ந்து, இன்று அவர்களுக்குச் சரிசமமாக எந்தத் துறையிலும் முன்னணியில் நிற்கின்றனர். இவர்கள் ஐரோப்பிய முறைகளை மட்டும் கற்றதோடு நின்றுவிடவில்லை. இவர்களுக்கு ஐரோப்பிய மனத்தின் சாயங்கூட ஓர் அளவிற்கு ஏறிவிட்டதென்றே கூறுவேன்.

ஜப்பானியர்களிடையே ஒரு பழமொழி உலவுகிறது. இவர்கள் கலப்பு ஜாதியனராம். இவர்கள் அசல் மங்கோலியர் அல்லவாம். ஆரிய ரத்தம் இவர்கள் உடலிலும் ஓடுவதாகச் சொல்லிக்கொள்கின்றனர். இவர்களுடைய மேனி

நிறம் பலவிதமாக வேறுபடுகிறது. ஓவியர் டயிக்கனுக்கு வேஷ்டியும் ஜிப்பாவும் அணிவித்தால் அவர் ஒரு வங்காளியாகவே தோன்றுவார்; ஜப்பானியன் என்று எவரும் நினைக்கவே மாட்டார். எந்த ஜாதியில், கலப்பு ஏற்பட்டு விட்டதோ அதன் மனத்தை ஒரே அச்சில் வார்த்து உருவாக்க முடியாது. இந்தக் கலப்பு விசேஷத்தால் மனம் விசித்திர வழிகளில் திரும்புகிறது. இவ்வாறு திரும்பும் மனமே முன்னுக்கு வருமென்று சொல்வது மிகையே.

ரத்தக்கலப்பிராத ஜாதியினர், பழமையான குடிமக்களே. பிறனை அஞ்சுபவர் அவர்கள். ஒரு சிறு வேலிக்குள் ஒடுங்கித் தம் இனத் தூய்மையைக் காக்க முயல்கின்றனர். ஆஸ்திரேலியா, ஆப்பிரிகாவிலுள்ள அநாகரீக மக்கள், பண்டைகாலத்தில் இருந்ததுபோலவே இன்றும் முன்னுக்கு வராமல் இருக்கின்றனர்.

கிரேக்க நாட்டைப் பாருங்கள். ஒருபுறம் ஆசியா, வேறுபுறம் எகிப்து, மற்றொருபுறம் ஐரோப்பா, அதைச் சூழ்ந்து நிற்கின்றன. இதனால் கிரேக்கர்களிடையே ஜாதிக் கலப்பு மூண்டது. அதே போல் ரோம் நாட்டவர்களிடையேயும். பாரத தேசத்திலோ, ஆரியர்களோடு ஆரியர் அல்லாதவர்களின் ரத்த சம்பந்தம் ஏற்பட்டது.

ஜாதிக் கலப்போடு, ஜப்பானின் இட நெருக்கமும் அதற்கு அனுகூலமே செய்கிறது. சிறிய இடத்தில் எல்லாரும் ஒன்று சேர்ந்து வலிமையுடன் வளர சௌகரியம் உண்டு. சீனா, பாரதம் போன்ற விசாலமான நாட்டில் வைசித்திரியம் இருந்தாலும், பல பிரிவுகளாகப் பிளந்து போய், தனித் தனியாக நிற்கவேண்டுமென்ற மனப்பான்மையே அதிகமாகிறது; ஐக்கியமாவதில் துளியேனும் விருப்பமில்லை. 'எல்லோரும் ஓர் குலம், ஓர் இனம், எல்லோரும் இந் நாட்டு மக்கள்' என்று ஜப்பான் பெருமையாகச் சொல்லலாம்.

ஜப்பானிய அரசியலார் விசேஷமாக ஷிந்தோ சமயத்தைத் தழுவியவர். இந்த தர்மம் வெறும் சீர்திருத்-



தத்தை அடிப்படையாகக் கொண்டது, ஆத்யாத்மிகமானதன்று. அரசனும், மூதாதைகளும் தேவர்களென்றே இந்த தர்மம் போற்றுகிறது. நாட்டுப் பற்றை தீவிரமாக்குவதற்கு இந்தச் சமயக் கோட்பாடுகள் பெரும் உதவி புரிகின்றன.

ஐரோப்பாவில் மற்ற நாடுகளைவிட, நவீன ஜர்மனியிடமிருந்தே ஜப்பான் சக்தி உபாசனையில் தீக்ஷை பெற்று வந்திருக்கிறது. நீட்ஷேயின் கொள்கைகளை வேதவாக்காகப் பாராட்டுகிறது ஜப்பான். இன்னும் அதன் உண்மை தர்மம் யாது என்று சொல்வதிற்கில்லை.

U9.4
N57

முற்றும்

1873

